Registered No. M. 1229.

உ

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

விவேகோதயம்

மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தினின்று
வெளிவரும்

மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"அறிவுடையார், எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்"—திருக்குறள்.

தொகுதி உ. } பிங்கள ௵ ஆடி
1917 ௵ ஜூலை ௴ { பகுதி ௬.

பொருளடக்கம்.

புதல்வர் கடமை:—	பத்திராதிபர்	163
வள்ளுவர் நேரிசை:—	அரசஞ் சண்முகனார்	166
சாணக்ய சாஹஸம்:-சந்திரகுப்த சரித்திரம் (இரண்டாம் பாகம்)	வி. பாலம்மாள்.	169
துருவசரித்திரம்:—	சி. நாராயணசாமி ஐயர், B. A. L. T.	711.
அந்தாதி:—	சி. கு. நாராயணசாமி முதலியார்	173
ஆத்திசூடி வெண்பா:—	அசலாம்பிகை அம்மாள்	177
அகச்சான்று அல்லது மனச்சாட்சி	R. S. கங்காஜடேச சர்மா	178
நன்மொழி;—	எம். எம். நாராயணசாமி ஐயர்	180
கமலாவதி (தமிழ் நாடகம்):—	K. வேங்கடராமையர்	181
விடுகதை வினா:—	சிற்றம்பல நாதன்	186
விநோதக்கூற்று:—	கொடைக்கரசு	186
சிறுவர்க்கான கதைப் பூங்கொத்து:—	வி. கு. நடராஜன்	187
சமாசாரக் கொத்து:—	பத்திராதிபர்	188
புத்தக மதிப்புரை:—	பத்திராதிபர்	189
விளம்பரங்கள்:—	மானேஜர்	

சொந்தக்காரர்:— ம. கோபாலகிருஷ்ணையர்

ம. கோபாலகிருஷ்ணையர்
வி. பாலம்மாள் } பத்திராதிபர்.

திருமங்கலம் ஸ்ரீகிருஷ்ண விலாசம் அச்சியந்திரசாலை

வருஷ சந்தா ரூ. 2—0—0] 1917 [தனிப்பிரதி அணா 3

வெளி நாடுகளுக்கு ரூ. 2—4—0.

குறிப்பு:—இதிலடங்கிய விஷயங்களைப் பத்திராதிபர் அனுமதியின்றி எவரும் பிரசுரிக்கக் கூடாது.

பட்டு பீதாம்பர கம்பெனி.

திருப்தியில்லாததைத் திரும்பப் பெற்றுக்கோள்ளலாம்	ஸ்ரீ காசி	பட்டு பீதாம்பரக் கியாட்லாக் இனமாய் அனுப்பப்படும்.

உருத்திராக்ஷங்கள், ஜபமாலைகள் பரிசுத்தமானவை.

108 உள்ள மாலை 1-க்கு 6 அணு முதல் ரூபா 12வரை. விலை அதிகப் படுவதுபோல் மணிகள் சிறிதாக இருக்கும். 6 முகக் கண்டிகள் 33 உள்ளது, கண்டி 1-க்கு ரூபா 1 முதல் 10 வரை. 5 முகக்கண்டி 32 உள்ளது, கண்டி 1-க்கு அணு 10முதல் ரூபா 10வரை. விலை அதிகப்படுவதுபோல், மணிகள் பெரிதாக இருக்கும். சம்மதமில்லாததை திரும்பப் பெற்றுக் கொள்ளப்படும்

வெண்பட்டு வேஷ்டிகள்.

சுத்தமான வெண் பட்டு வேஷ்டிகள் கோயமுத்தூர் சேலம் வேஷ்டி கள் மாதிரி: ஸன்ன கம்பி ருத்திராக்ஷக் கம்பி ஜரிகைக் கம்பி போட்டவை

4	முழம்	2	அகலம்	1-க்கு	ரூபா	4-8	முதல்	7	வரை.
6	,,	2½	,,	1-க்கு	,,	7	,,	9	,,
6	,,	3	,,	1-க்கு	,,	10	,,	12	,,
7	,,	2½	,,	1-க்கு	,,	8	,,	12	,,
7	,,	3	,,	1-க்கு	,,	10	,,	14	,,
8	,,	3	,,	1-க்கு	,,	12	,,	18	,,
9	,,	3	,	1-க்கு	,,	14	,,	20	,,
10	,,	4	,,	1-க்கு	,,	15	,,	22	,,

பனி! பனி!! பனி!!!

பனிக்கு அடக்கமாக சுத்தமான் கம்பளி ரோமத்தால் செய்யப்பட்ட உறுதியும், நைஸும், நேர்த்தியுமான கம்பளிப் போர்வைகள், 6 முழநீளம் 3 முழ அகலம். சிவப்பு முதலிய சகல நிறத்திலும் தயாராக இருக்கின்றன உருப்படி 1-க்கு ரூபா 5—8—0. கொஞ்சம் சிறிது 1-க்கு ரூபா 4—8—0. கேம் வர்ணப்போர்வை 1-க்கு ரூபா 6—8—0. தபால் செலவு பிரத்தியேகம்

காசி வயிரவர் கயிறு.

முதல் நெம்பர் 100-க்கு	...	...	3—0—0
2-வது நெம்பர் 100-க்கு	...	...	2—0—0
3-வது நெம்பர் 100-க்கு	...	...	2—0—0
4-வது நெம்பர் 100-க்கு	...	...	0—6—0

குழந்தைகள்.

குழந்தைகள் விளையாடக்கூடிய பித்தளை வெண்கலத்தால் செய்த செம்பு, குடம், கண்டி முதல் 32 சாமான்கள் அடங்கிய அழகும் நேர்த்தி யும்நைசும் பளபளப்புமுள்ள அழகிய பாத்திரங்கள் 32 உள்ள சிறு செட்டு 1-க்கு ரூபா 2. பெரிய செட்டு 1-க்கு ரூபா. 4

உடனே எழுதுங்கள் விலாசம்:— மானேஜர்,

பட்டு பீதாம்பர கம்பெனி, தாராநகர்தெரு, காசி.

Manager, Silk Petamber Co, Dharnagar St, Benares City.

சர்வதேள் விஷ சஞ்சீவி.

"கதறி வந்தவன் களிப்புடன் செல்வான்!"

"விஷம் தீண்டினவன் நிமிஷத்தில் குணமடைவான்!"

குணமில்லாவிட்டால் ரூ 100 இனும் கொடுக்கப்படும்.

நண்பர்களே! ஒவ்வொருவீட்டிலும் தேளினுடைய உபத்ரவம் பொறுக்க முடியாமல் அவஸ்தைப்படுவதை நாம் அனைவரும் கண்டு விசனமுற நேரிடுவதைப்பற்றி, நாம் அதிக கஷ்டப்பட்டு இதற்காக உயர்ந்த மருந்து கண்டு பிடித்திருக்கிறோம். இது அநேக ஐரோப்பிய டாக்டர்களாலும், தமிழ் வைத்திய பண்டிதர்களாலும், நன்கு மதிக்கப்பெற்றது. எமது மேற்கண்ட லங்கர் மார்க்குள்ள சர்வதேள் விஷ சஞ்சீவியைத் தேள் கொட்டின விடத்தில் உபயோகிக்க உடனே ஒன்றிரண்டு நிமிஷத்திற்குள் குணமடையச செய்யும். இவ் விஷ சஞ்சீவியை இன்னும் எலி, நாய், பூரான், செய்யான், பாம்பு, நண்டுத் தெறுக்கால் முதலிய எவ்வித விஷ ஜெந்துக்கள் தீண்டினாலும், டைரக்ஷனில் சொன்ன பிரகாரம் உபயோகித்தால் குணமடையலாம். மேற் சொன்னவைகளுக்கு உபயோகித்து குணமில்லாவிடில், பணம் வாபீஸ் செய்து விடப்படும்.

இந்த சர்வதேள் விஷ சஞ்சீவியைக் கைப்பற்றுங்கள். இவ்விஷ சஞ்சீவி ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்க வேண்டியது. ஏனென்றால், ஓர் மனிதனை இரவில் 12மணிக்கு நித்திரையில் விஷந் தீண்டி விட்டால், அம்மனிதன்எவ்வளவோ அவஸ்தைப்பட அநேகமருந்துகளையும் மந்திரங்களையும் உபயோகித்தும் பயன்படாமற் போகிறதல்லவா? அதற்காக இவ் விஷ சஞ்சீவி ஒவ்வொரு இல்லத்திலும் அவசியம் இருக்க வேண்டியது. அடியிற்கண்ட விலாசத்திக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

விலை பாக்கட் 1-க்கு 0—8—0

விலை பாக்கட் 12-க்கு 5—0—0

விலாசம்

வி. ஏ. எஸ். பாணி,

3, இருளப்பன் வீதி,

மதிராஸ்.

அமிர்தாரணவ லேகியம்.

இந்த லேகியம் ரத்தத்தை சுத்தி செய்து விர்த்தியாக்கி, நரம்பு ஸ்தானங்களை எல்லாம் பலப்படுத்தி, தேகச்சூடு, பித்தவாயு, கைகால் கண்ணெரிச்சல், இவைகளைச் சமனஞ் செய்து, மூளையைக் குளிரப்பண்ணி, தேக பலத்தையும் மேனியையும் உண்டாக்குகின்றது. மேலும் இம்மருந்து நாள்பட்ட க்ஷயம், கிரஹணி, நீடித்ததலைநோய், மார்புவலி முதலிய வியாதிகளையும் கண்டிக்கின்றது. எவ்வித பத்தியமுங் கிடையாது.

20-தோலா கொண்ட டப்பி 1-க்கு ரூபா 2—0—0

எங்கள் கியாட்லாக் இனமாய் அனுப்பப்படும்.

இனிமையானது! பரிமளமிகுந்தது!

மணி ஆயில்.

முப்பத்தைந்து வருஷ காலமாய் விற்பனையாகி வருகிறது.

இந்தக் கூந்தல் தைலம் சாஸ்திர முறைப்படி செய்யப்பட்டிருக்கிறது. அலங்காரத்துக்கு யோக்கியமான மனோகரமான சுகந்தமுள்ளது. சிரசில் உபயோகித்து வந்தால் ரோமங்களை உதிராமற்றடுத்து, நீண்டு அடர்த்தியாய் வளரும்படி செய்கிறது. தற்காலம் வெளிவந்துலாவும் தைலங்களைப் போல் கருதி விடக்கூடாது. ஒரு தடவையாவது வாங்கி உபயோகித்து உண்மையையறியுங்கள். சிரசுக்குத் தடவுவதனால் மூளைக்குக் குளிர்ச்சியையுண்டுபண்ணக்கூடியது. இது ஒன்றுதான். புட்டி 1-க்கு ரூ 1. ஐந்து புட்டி ஒரு தடவையில் வாங்கினால் விலை ரூ-4. வி.பி.செலவு பிரத்தியேகம். இன்னும் விபரம் வேண்டுவோர் எங்கள் கியாட்லாக்குக்கு எழுதுங்கள்.

வைத்திய சாஸ்திரி,

மணிசங்கர்கோவிந்தஜி,

ஆதங்க நிக்கிரக ஔஷதாலயம்,

45=மேலக்கோபுரவீதி,

மதுரை.

உ

போங்கும் மங்களம் எங்கும் தங்குக.

விவேகோதயம்.

மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தினின்று
வெளிவரும்
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"அறிவுடையார், எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்"—திருக்குறள்.

தொகுதி உ.	பிங்கள ௵ ஆடி ௴ 1917 ௵ ஜூலை ௴	பகுதி சு.

புதல்வர் கடமை.

(134–ஆம் பக்கத் தொடர்ச்சி.)

"அன்பு அச்சம் அறியாது" என்பதற்கு மற்றும் இரண்டு உதாரணங்கள் கூறிப் பிற விஷயங்களுக்குச் செல்வாம்.

ஐரோப்பாவில், இட்டலிக்கு அருகிலுள்ள ஸிஸிலி என்னும் தீவில் எட்னா என்ற ஓர் எரிமலை உளது. அஃதொரு கடுங்கோபி. திடீரென்று அது அக்கினியைக் கக்கி, சுற்றிலும் உள்ள இடங்களி லெல்லாம் சாம்பலும் கரியும் புகையும் நிறைத்து விடும். அதனின்றும் கிளம்பும் அந்தராக்கினியினால் பூமியில் உள்ள கல் மண் முதலியன குழம்பாகி, நானா பக்கங்களிலும் வழிந்தோடி, அருகில் உள்ள ஊர்களை அழித்து விடும். வழிந்தோடும் இக் கற்குழம்புகள் பேராறுகளாய்ச் சமுத்திரம் போய் விழுவது முண்டு. அப்பொழுது உண்டாகும் உயிர்ச் சேதமும் பொருட் சேதமும் இவ்வளவாகும் என்பது எவர்க்கும் சொல்லாமலே விளங்கும். அடிக்கடி இத்தகைய பெருந்துன்பம் எட்னாவால், விளைவதுண்டு. இத்துன்ப மென்பதே எட்டிப் பாராத இடம் ஒன்று ஸிஸிலித் தீவில் உள்ளது என்றால் ஆச்சரியந் தானே? அது எட்னாவிற்குச் சமீபத்திலுள்ள கிராமத்தின் பக்கத்தில் உள்ளது. நாளைக்கும், வருஷம் 365 நாளும், அது 'பச்சைப் பசே'லென்று பயிர் பச்சை நிறைந்துள்ள ஓர் பகுதியாகவே இருந்து வருகிறது. இப்பகுதிக்குப் "புனிதர் புலம்" (The Field of the Pious) என்றுபெயர். "அப்புலத்தில் உய்க்கும் ஓர் வழிக்கு சற்புத்திரர் மார்க்கம்" என்று பெயர். அவற்றிற்கு இப்பெயர்கள் வந்த வரலாறு பின்வருமாறு கூறப்படுகின்றது.

சில நூற்றாண்டுகட்கு முன் எட்னாவிற்குப் பிரமாத கோபம் வந்து விட்டது. கற்குழம்பு நான்கு பக்கங்களிலும் வழிந்தோடிச் சுற்றிலும் உள்ள பல கிராமங்களைப் பாழாக்கி, ஆயிரக் கணக்கான உயிர்கட்கும் அளவிலாப் பொருள்கட்கும் அநர்த்தம் விளைத்தது. அக்கம்பக்கங்களிலிருந்தோர் உயிர்தப்புமாறு, தலைப்பேன் தெறிக்க ஓடலாயினர். அங்ஙனம் ஓடும்போதே அவர்கள் தங்களிடத்திருந்த அரும்பெரும் பொருள்களில் எவ்வளவு தூக்கிச் செல்லக் கூடுமோ அவ்வளவும் அதி சிரமப் பட்டுச் சுமந்தோட லாயினர். இங்ஙனம் சென்ற ஆஸ்திக்காரர்களுள் அனப்பியஸ், ஆம்பிநோமஸ் என்ற வாலிபர்கள் இருவர். இவ்விருவர்களும் சகோதரர்கள். இவர்கள் தூக்கிச் சென்ற சுமை பிறர் தூக்கிச் சென்ற சுமையிலும் முற்றிலும் வேறுபட்டதாகும்; அச்சுமை இன்னதென இனி அறிவீர்கள். கற்குழம்பாறு தங்களை நோக்கிச் சமீபிக்கும் விஷயம் இரு சகோதரரும் அறிந்தனர். தாங்கள் ஆதியில் பிறர்போல் தூக்க முடியாமல் தூக்கிச் சென்ற அரும் பெரும் பொருளையெல்லாம் துரும்பென மதித்து தூரத்தெறிந்தனர். இதற்குள் அவர்கள் காணக் கூடிய தூரத்திற்கு வந்துவிட்டது கற்குழம்பாறு. அதனைக் கண்டதும் உள்ளம் பதைத்து ஓடி விட்டனரோ? இல்லை. ஏன்? இவர்களுடைய தாய் தந்தையர் அதி விருத்தர். நடந்து வரப் போதிய சக்தி அவர்கட்கு இல்லை. "நம்மைப் பெற்று வளர்த்த தாய் தந்தையரினும் அருமையான பொருள் வேறொன்றேது?" என எண்ணி "நம் உயிர்போனாலும், அதுபோகும் வரையாவது அவர்களை இயன்றவரை காப்பதே நம் மேலான கடமை" என்று தீர்மானித்து விட்டனர். அனப்பியஸ் தந்தையையும், ஆம்பிநோமஸ் தாயையும் முதுகின்மேல் தூக்கிக் கொண்டுபோய் ஓர் பத்திரமான இடத்தில் சேர்த்தார்கள்.

என்ன அதிசயம்! வழிந்தோடி வந்த கற்குழம்பாறு விரைந்தோடி வந்தும் அவர்கள் சென்ற பாதைகளிலும் தங்கிய புலத்திலும் மட்டும் செல்லாமல் மற்ற இடங்களிலுள்ள மன்னுயிர்களில் பல மடியச் சென்றது. அச்சமென்பது சிறிதும் அறியாது, மெய்யன்பு மேலீட்டால் தம் பெற்றோரிடத்து இப்புத்திரர் காட்டிய வீரத்திற்கும், பெற்றோரைப் பேணுவோர் கடவுளால் எய்தும் பெரும் பேறுக்கும் அறிகுறியாய், எந்தவழியாய் அவர்கள் தங்கள் தாய்தந்தையர்களைச் சுமந்து சென்றார்களோ, அந்தவழிக்குச் 'சற்புத்திர மார்க்க' மென்றும், அவர்கள் தங்கிய புலத்திற்குப் 'புனிதர் புலம்' என்றும், அது முதல் பெயருண்டாயிற்றாம். இப்பெயரையே இட்டு யாவரும் இன்றும் வழங்கி வருகிறார்கள். நிற்க.

கசியப்பர் மனைவியர் பதினைவரில் விநதை யென்பாளுக்கு மகனாகப் பிறந்தவன் கருடன். ஒருநாள் விநதையும், அவளது சக்களத்தியும் சகோதரியுமான கத்துருவும், திருப்பாற் கடற் கரைக்குச்

சென்றபொழுது உச்சைச்சிரவம்என்ற இந்திரனது வெள்ளைக்குதிரையைக் கண்டனர். கண்டதும் அதனைக் குறித்து வேடிக்கையாகச் சம்பாஷிக்கையில், கத்துரு, விநோதார்த்தமாக, "சந்திரனைப்போல் இக்குதிரை வெண்ணிறத்ததேனும் அதில் மாசு படிந்திருப்பதைப் போல் இக்குதிரை வாலினும் கருநிறம் கலந்திருப்பதைக் காண்" என்ன, விநதை "நீ சொல்வது தவறு. சந்திரனுடன் உவமித்ததால் இதற்கும் ஓர் களங்கம் கூற வேண்டி 'இக்குதிரைவால் கறுப்பு' என்றால், நான் ஒப்புக்கொள்வேனோ? சுவாமி கொடுத்த கண் இல்லையா? தூய பால் வெண்ணிறத்ததே அது" என உண்மையைச் சாதித்தாள். கத்துரு விநதை சொல்வதே உண்மையென அறிந்தவளாயினும், அவள் சொல்வதற்கு இணங்குவது அகௌரவமென எண்ணி, அது கறுப்பென்றே வாதித்தாள். இவ்வாறு இருவரும் இசைந்து போகாமையின், வாக்கு வாதம் வலுவாக முற்றியது. கடைசியில், மறுநாள் இருவரும் குதிரையருகிற் சென்று பார்க்க வேண்டுமென்றும், யார்சொல் பொய்யாய் விடுகிறதோ அவர் மற்றவர்க்கு அடிமையாய் விடவேண்டுமென்றும், தம்முள் தீர்மானித்துக் கொண்டு வீடு திரும்பினர். திரும்பியதும், கத்துரு, தன் மக்களை நோக்கி "எப்படியேனும் என் வார்த்தையை மெய்ப்பிப்பதற்கானவை நீங்கள் காலந் தாழாது செய்து தீரவேண்டும்; நாளை நானும் விநதையும் சென்று பார்க்கும் பொழுது குதிரைவால் கருநிறத்துடன் காணப்படவேண்டும்" என வற்புறுத்திக்கூறினள். ஆயினும் அவளது மக்களாகிய ஆதிசேஷன் வாசுகி முதலியோர், "உச்சைச்சிரவத்திற்கு ஓர் ஒச்சம் கற்பிப்பதும் பொய் கூறுவதும் பாபம்" எனக் கூறி, அவள் கூறியபடி செய்ய மறுத்தே விட்டனர். கார்க்கோடகன் ஒருவனே

"தன்னைஈன் றோர்கள் வாக்கைத் தாங்குதல் கடனென் றாலும்
புன்னெறிக் குய்ப்பவாகிற் போற்றிடா தொழிதல் மேன்மை"

என்பதைச் சிந்தியாதும், தாயின் கொடுமைக்கு அஞ்சியும், விரைந்தோடி, எவரும் அறியாதபடி அக்குதிரைவாலை நஞ்சூட்டிக்கறுக்கச் செய்தனன். இஃதறியாப்பேதை விநதை, மறுநாள் தான் சென்ற காலையில் குதிரை வால் கறுத்திருக்கக் கண்டு, கத்துருவுக்குத் தன் வாக்குப் பிரகாரம் அடிமையே ஆயினள். இங்ஙனம் அடிமையாய் விட்ட விநதை, தன் சிறை நீக்குமாறு கத்துருவை வேண்ட, அவள் "தேவ லோகத்தில் உள்ள அமுத கலசத்தை நீ கொண்டுவந்து கொடுப்பின் சிறை நீங்குவை" என்றனள். இதற்குப் பின்தான் விநதை காசியபர் அருளால் கருடனைப் பெற்றது. இக்கருடனை நோக்கி, விநதை, "என் சிறை நீங்க, உனக்கு விருப்பம் இருக்குமாயின், தேவலோகத்தில் பெருங்காவலோடு போற்றப் பட்டிருக்கும் அமுத கலசத்தைக் கொண்டுவந்து கத்துருவிடம் சேர்ப்பிப்பாயாக" என்றனள். தாய் மொழி கேட்ட தநயன், உடனே உம்ப

ருலகுற்றுப் பல சங்கடங்கட்கு முள்ளாகியும் மனந்தளராது, அமுத கலசத்தைக் காத்திருந் தோரை வென்று, அதனைக் கொண்டு திரும்புகையில், மகாவிஷ்ணு அவனை எதிர்த்து இருபத்தொரு தினங்கள் கடும்போர் செய்தனர். ஆயினும் கருடன் அற்பமும் தோல்வியடையாது அஞ்சா தெதிர்த்தலைக் கண்டு, அதிசயித்து, "இவனைப் பலத்தால் வெல்லல் அசாத்தியம். வஞ்சனையினுலேயே வெல்ல வேண்டு" மென எண்ணி, கருடனை நோக்கி; "தாய் சொற் றுறவாத் தநய! நின் வன்மைக்கு மகிழ்ந்தேம். உனக்கு வேண்டும் வரம் யாது?" என, கருடன் நகைத்து, "என்னை வெல்ல முடியா நீயோ யான் வேண்டும் வரங் கொடுக்க வல்லவன்? நின்னிடம் இரத்தல் இழிவினும் இழிவாம். உனக்கு வரம் வேண்டுமாகில் யான் தருகிறேன்" என்றான்.

"பார்க்கா ரரயினும் நாகாக்க; காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"

என்றது பொய்யோ? உடனே விஷ்ணு இதுவே சமயமெனக் கருடனை நோக்கி,

"தூயை! ஓதிய சொற்றவ றுயெனில்
நீயெனக்குநெ டுந்தகை ஊர்தியாய்
ஏயும் இவ்வரம் யான்கொள ஈகுவாய்"

என்றுகூற உடனே அச்சத்திய சீலன் திருமாலுக்கு வாகனமேயாயினன். இங்ஙனமாயபின் விஷ்ணுவின் ஆணை பெற்று அமுத கலசத்தைத் தன் அன்னை சொற்படி கத்துருவிடம் ஒப்பித்து, விநதை சிறை நீக்கினன்.

(இன்னும் வரும்)

பத்திராதிபர்.

சோழவந்தானூர் அரசஞ் சண்முகனுர் இயற்றிய

வள்ளுவர் நேரிசை.

(106–ஆம் பக்கத் தொடர்ச்சி.)

என்னும் பொருள்பெற்றும்? ஔவைக் கிடாள்சோறு
மன்னுமொரு வன்மனையாள் வள்ளுவரே !—உன்னில்
உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை: மடவார்கண் உண்டு. (௯௰)

(அ-ம் முதலியன):—உடமையுள்-பொருளுடையரா யிருக்குங்காலத்து, இன்மை-வறுமையாவது, விருந்தோம்பல்ஓம்பா – அதிதி பூஜையை இகழும், மடமை-பேதமையாம், மடவார்கண்-(அது புருஷர்களிடத்திற் பெரும்பாலும் இராது) அறிவிலாப் பெண்டிரிடத்து, உண்டு-காணப் படுவதாகும், ['மடவார்கண்' என்பதற்கு "விருந்தோம்பலை இகழ்வது பேதமை என்ற உண்மையை அறியாதவரிடத்தில்" என்று முன்னோர் பொருள் கூறியிருப்ப, சந்தர்ப்பத்திற் கேற்றபடி 'அறியாப் பெண்டிரிடம்' எனப் பொருள் கூறப் பட்டதாகும்.]

ஒருவன் மனையாள் ஔவைக்குச் சோறிடாமை:—'உப்புக்கும் பாடி, புளிக்கும் ஒரு கவிதை ஒப்பிக்கும்' உளத்தளாகிய ஔவை, ஒருநாள் பசி தாகத்தாற் களைத்து, உணவு வேண்டி, வீடு வீடாக நுழைந்து வருங்கால், ஒரு வீட்டுத் திண்ணையில் இல்லறத்தான் ஒருவன் இருக்கக் கண்டு, தன் வாய் திறந்து இரக்கத் துணியாளாய், தன் மனக்குறிப்பை முகத்தால் தெரிவித்தனள். அஃதுணர்ந்த வீட்டோன் மனங்கசிந்து கொடியளாகிய தனது மனைவியின் சம்மதத்தைப் பெற்று, விருந்தோம்புமாறு, அவளுக்கு வேண்டிய பணிவிடைகள் பலசெய்தான். 'விருந்தோம்ப வேண்டு'மென புருஷன் விளம்பியவுடன், மனைவி சினந்து, கணவனைச் சிக்ஷித்தனள். இவற்றைக் கண்ட ஔவை அங்கு உண்ண மனம் பொறாது, வேறு வீடு சென்று எளியோன் ஒருவன் அன்புடன் இட்ட அற்ப போஜனமுண்டு, பசியாறி மகிழ்ந்தனள். அறிவிலாப் பெண்டை அவளது கணவன் உபசரித்த விதமும், அதன் மேல் அவள் செய்ததும்

"இருந்து முகந்திருத்தி ஈரோடு பேன்வாங்கி
விருந்துவந்த தென்று விளம்ப—வருந்திமிக
ஆடினாள் பாடினாள் அடித்தாள் பழமுறத்தால்
சாடினாள். ஓடோடத் தான்"

என்ற வெண்பாவினால் அறிக.

பண்டறிவால் வந்து நொந்தான் பாஞ்சாலன் முன்மறைதேர்
வண்டார்த் துரோணனும் வள்ளுவமே!—கொண்டபின்
மோப்பக் குழையும் அனிச்சம்; முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து. (ய)

(அம்-முதலியன):—பண்டு அறிவால்-முன்பு அறிந்திருந்த காரணத்தால், பாஞ்சாலன்-துருபதன், வண்தார் துரோணன்-வளப்பம் பொருந்திய தாமரை மாலையணிந்த துரோணாசாரியன், கொண்டபின்-செடியினின்றும் பிடுங்கி கைக்கொண்ட பிற்பாடு, மோப்ப-மோந்து பார்த்த நிமிஷமே; குழையும்-வாடும், அனிச்சம்-அனிச்சம் என்னும் மலர், திரிந்து-மாறி, விருந்து-புதிதாக வந்தவன்.

துரோணன் பாஞ்சாலன் முன் வந்து நொந்தமை:—துரோணரும், பாஞ்சால ராஜ குமாரனை துருபதனும் ஒரே ஆசிரியரிடம் வில் வித்தை கற்று வருகையில், துரோணர் சகல வித்தைகளிலும் சிறந்து ஆசாரிய ஸ்தானத்திலிருந்து துருபதனுக்குத் தெரியாத யாவும் கற்றுத் தந்தார். தான் பெற்ற பேருதவிக்கு மிக மகிழ்ந்த துருபதன், ஒரு நாள் துரோணரை நோக்கி, "ஐய! நீரே எனது பரமாசிரியர். எனக்கு அரசுரிமை கிடைக்குமாயின், குரு தக்ஷிணையாக நான் என் அரசிற் செம்பாதி அளித்தே

தீர்வேன்." என்ன, துரோணர், "என்னிடத்தில் உனக்கு இப்போதுள்ள அன்பு என்றும் மாறாதிருப்பதாக. அஃதொன்றிருந்தால் எனக்கும் உனக்கும் ஒரு குறையும் இல்லை" என்றனர். சிறிது காலத்திற்கெல்லாம் துருபதன் பாஞ்சால மன்னனாயினன். அச்சமயம் துரோணரும் அவரது மனைவியாகிய கிருபியும், ஈசுவரானுக்ரகத்தினால் குதிரை வயிற்றிற் றோன்றிய அசுவத்தாமன் எனும் குழந்தையைப்பெறும் பாக்கியமுற்றனர். அம்மகவுக்குப் பாலின்றி இருவரும் வருந்தியபோது, கிருபியின் நல்லாலோசனைக்கிணங்கித் துரோணர், பாற்பசு ஒன்று யாசிக்கத் துருபதனிடம் சென்றார். துருபதனுக்குப் பழைய நினைவு வந்து விட்டது. பாதிராஜ்யம் பெறவே துரோணர் வந்தாரெனக் கருதினான் "அறம் நிரம்பிய அருளுடை அருந்தவர்க்கேனும், பெறலரும் திருப் பெற்றபின் சிந்தனை பிறிதாம்" அன்றோ? "ஐயோ! என் செய்வது?" என நினைத்து, முகம் வேறுபட்டவனாய், ஒன்றுமே தெரியாதவன் போல் துரோணரை நோக்கி, "ஐய! நீர் யார்? எங்கு வந்தீர்? உமக்கு எந்த ஊர்?" என்ன, துரோணர் கள்ளங் கபடு அறியாது, "வெகு நாளாயினமையின் நம்மை இவன் அடையாளம் கண்டு கொள்ளவில்லை போலும்!" என எண்ணி, "அரசே! நான் உனது ஆசானாகிய துரோணன் அல்லனோ?" என்ன, துருபதன், "நீராவது எனது ஆசானாவது? ஒருபோதுமில்லை. ஏதோ மறந்து உளறுகிறீர்" என்றான். துரோணர் அதிசயித்து "ஐய! நீயும் யானும் ஒரு ஆசிரியன் பாற் கற்றதேனும் ஞாபகமில்லையோ?" என்ன, அவன் நகைத்துப் "போம் போம் பித்தரே. முதலில் எனது ஆசிரியர் என்றீர். பிறகு என்னொடு கற்றவன் என்றீர். உமக்குப் புத்தி ஸ்வாதீனமில்லை போலும்" எனக்கடிந்து கூற, துரோணர், தம்மையே நொந்தவராய் "வேந்தே! நீ என் உதவி பெற்று மகிழ்ந்து, உனக்கு அரசுரிமை கிடைத்தவுடன் பாதி ராஜ்யம் கொடுப்பதாக வாக்களித்ததும், அதற்கு நான் அளித்த விடையுமேனும் ஞாபகத்தில் உளதா?" என்வினவ, துருபதன் பெரிதும் வெகுண்டு, "நீர் பெரும் பொய்யர். போம் வெளியே" என்ன, துரோணர், "எனக்குப் பாதி ராஜ்யம் வேண்டுவதில்லை. பால்மணம் மறா இப்பசுங் குழவி நிமித்தம் ஒருபாற்பசு வேண்டிப் பெறவே நின்பாலுற்றேன். அது தந்தாற் போதும்" என்ன, துருபதன் நகைத்து, "நீர் முன்னமேயே பசுக் கேட்டிருப்பின் ஒரு பசுவுக்கு ஐந்து பசு தந்திருப்பேன். நீர் பெரும் வஞ்சகரும் பொய்யருமாதலின் ஏதும் கொடேன். புறஞ்செல்க" எனத் துரத்த, துரோணர் புழுங்கிய மனத்தராய், துருபதனை நோக்கி, "யானோ பொய்யன்? அடாத பொய் கூறி என்னை அவமதித்த நினக்குத் தக்கவாறு புத்தி வரச் செய்கிறேன். நீ சொல்லிய பாதிராஜ்யத்துடன் முழு ராஜ்யமும் பெறுகிறேன்" எனச் சினந்து கூறி வருத்தத்துடன் அஸ்தினாபுரம் சென்றனர்" என்பதே.

[அஸ்தினாபுரம் சென்றவர் பாண்டவ கௌரவர்க்கு வில்லாசிரியராகி அர்ச்சுனனைப் பாஞ்சால நாட்டிற்கு அனுப்பித் தம்மை அவம்கித்த துருபதனைத் தேர்க்காலில்கட்டிவரச்செய்து, துருபதனைநோக்கி "இப்பொழுது முழு ராஜ்யமும் என்னது உன் உயிரும் என்னது- அற்ப புத்தியுள்ள உனக்கு இவ் அவமானமே போதும். உனக்கு ராஜ்யமும் உயிர்ப் பிச்சையும் தந்தேன். ஓடு" என்று கூறிய விபரமும் பிறவும் பாரதக் கதையினின்றும் அறிக.]

ம. கோ.

சாணக்கிய ஸாஹஸம் என்னும்

சந்திரகுப்த சரித்திரம்.

ஒன்பதாவது அத்தியாயம்.

மாமியின் துயரமும் மருகியர் உறுதியும்.

பாகுராயணன் அரண்மனை சென்று ராஜஸ்திரீகளைக் கண்டு சந்திரகுப்தன் சொல்லியனுப்பிய சமாசாரங்களை உரைத்தான். அதற்கவர்கள், "ஐய! பாகுராயண! சந்திரகுப்தனுரைத்த சமாதானங்களை அறிந்தோம். அவன் மஹாகுணசாலி. சொன்னபிரகாரம் நடத்தத் தவறமாட்டான். எங்களுக்கு அவனிடம் புத்திர வாஞ்சையிருக்கிறது. ஆனாலும், இப்பொழுது சஹகமனம் செய்வதே எங்களுக்கு நற்கதியளிப்பதாயும், யுக்தமாயும் தோன்றுகிறது. நமது வம்சத்தில் சந்திரகுப்தனாவது கீர்த்திமானாயும், க்ஷேமத்துடனும், புத்திர பௌத்திரருடன் வாழ்ந்து கொண்டு இருக்கவேண்டியது. மேல் ஆகவேண்டிய காரியங்களை நாங்கள் முன் சொன்னது போல் சீக்கிரம் சித்தப்படுத்து. இதோ நாங்கள் புறப்பட்டுவிட்டோம்" என்றனர். பாகுராயணன் பதில் ஏதும் சொல்ல நாவெழாமல், 'உத்தரவு' என்று அவர்களைக் கும்பிட்டுச் சென்றான்.

இவை யாவும் கேட்டுக்கொண்டிருந்த ஸுநந்தாதேவி, மருமக்களின் கையைப் பிடித்துக்கொண்டு, "அருமைக் குழந்தைகளே! என் புத்திரர்களெல்லாம் விதிவசத்தால் மாண்டு போனார்கள். நீங்களாவது உயிருடனிருந்து என்னை இந்த வயதுகாலத்தில் ஆதரிக்க வேண்டாமா? பெற்ற பெண்களைப்போல் பிரியமாக உங்களை நடத்தி வந்தேனே!. என்னைத் தனியே விட்டுக் குழந்தைகளாகிய நீங்கள் உயிர் துறக்கலாமோ? என் கண்மணிகளே! இந்த நிலைமையில் உங்களைப் பார்த்துச் சகிப்பது கஷ்டந்தான். ஆனாலும் என் புத்திரர்களையிழந்த துக்கம் பாதியேனும் உங்களைப் பார்த்தவுடன் தெரியாதிருக்குமே!. என் பிள்ளைகளாவது யுத்தத்தில் "ஜயித்துத் திரும்பி வருகிறோம்" என்று சொல்லிச் சென்று கண்காணாமல் மடிந்தார்கள். நீங்களிப்போது என் கண்ணிரண்டும் காண உயிர்விடும் நிமித்தம் செல்வதை நான் கண்டு எவ்விதம் ஸஹிப்பேன்! பர்த்தாவிடமிவ்வளவு பக்தியுள்ள நீங்கள் மாமியாகிய என்னை அநாதரவு செய்யலாமோ? புத்திரர்களை இழந்து வருந்தும் இச் சமயம் உங்களையும் இழந்து எவ்விதம் பொறுப்பேன்!" என்று பலவாறு இரங்கிக் கூறினள்.

அப்போது அவர்கள் "தாயே! எங்களை மன்னிக்க வேண்டும். உயிரினும் சிறந்த கணவனையிழந்தபின் ஸ்திரீ ஜாதிக்கு உலகில் சுகமுண்டோ? தம் நாயகர்கள் உயிருடன் இருக்கும்வரை அடிதொழுது உபசரித்து, அவர்கள் காலமாய்விடில் ஸஹகமனம் செய்வதே

பதிவிரதைகட்கு அழகு. இது தாங்கள் அறியாததோ? முன்பும் நமது
வம்சத்தில் அநேக ஸ்திரீகள் இவ்விதம் செய்திருக்கிறார்களே. இப்
போது தாங்கள் எங்களிடமுள்ள அபிமானத்தினால் எங்கள் பிரி
வுக் கிரங்கித் தடுக்கிறீர்கள். ஆயினும், இதுவரை கந்த புஷ்பங்களா
லும், விலையுயர்ந்த ஆடை ஆபரணங்களாலும், மஞ்சள், குங்கும
மிவைகளாலும் அலங்கரிக்கப்பட்டு சுகமாகவும் ஸந்தோஷமாகவும்
தங்கள் புத்திரருடன் நாங்கள் இருந்ததைக் கண்டுகளித்த தாங்கள்,
இப்பொழுது புருஷனை யிழந்து வைதவிய திசையை யடைந்து சக
லத்தையும் துறந்து காயக் கிலேசத்துடனும் கண்ணீருடனும் காலங்
கழிப்பதைக்கண்டு ஸஹித்துக் கொண்டிருப்பது முடியாத காரி
யம். தாங்கள் க்ஷத்திரிய வம்சத்திற் பிறந்து சுத்த க்ஷத்திரியர்களைப்
புருஷனாகவும் பிள்ளைகளாகவும் அடைந்தும், கேவலம் இது விஷய
த்தில்இவ்வளவு வருத்தப்படலாமோ? க்ஷத்திரியர்கள்
யுத்த களத்தில் மடிவதும், அவர்களுடைய பத்தினிகள் ஸஹகமனம்
செய்வதும் ஸகஜமே. சாவித்திரியைப்போல் இறந்தபுருஷனை எழுப்
பிக் கொள்ளக்கூடிய மகிமை யடையாவிடினும், கேவலம் புருஷன்
சென்ற வழிக்கேனும் செல்லாது, சூரியனற்ற ஆகாயம் போ
லும், தண்ணீர் வற்றிய தடாகம் போலும் உயிருடன் இருந்து பய
னென்ன? வேர் அறுபட்டபின் விருக்ஷம் நிலைக்குமோ? உயிரற்ற
உடலை உடனே வீட்டினின்றும் வெளிப்படுத்துவது போல் நாதன
ற்ற ஸ்திரீகள் ஸஹகமனம் செய்யவேண்டியது சாஸ்திர வித்தமாயி
ற்றே? அரை நாழிகையும் பிரியாமலிருந்த பர்த்தாவை சீக்கிரம்
கண்டு களிக்கும்படித் தாங்கள் அனுக்கிரஹிக்கவேண்டும். தாயே! தங்
கள் திருவாக்கினால் உத்தரவளித்து எங்களுக்கு 'நற்கதி உண்டாகுக'
என ஆசீர்வதிக்க வேண்டும்'' என்று மன்றாடினர்.

இங்ஙனம் மன்றாடி நிற்கும் மருமக்களின் உறுதி கண்டு ஸர்
வார்த்தஸித்தி தனது மனைவியை நோக்கி "ஸுநந்தே! நீ எவ்வளவு
ஸமாதானம் செய்தபோதிலும் இந்தப் பாலிகைகள் ஸம்மதிக்கக்
கூடியவர்கள் அல்லர். அவர்கள் சொல்வதே ஞாயமாக இருக்கிறது.
அவர்கள் நற்கதி தேடிக் கொள்ளும் விஷயத்தில் நீயும் ஸம்மதப்
படவே வேண்டும். முந்தி நமக்குரைத்த மகரிஷி வாக்கியம் வீண்
போகாது அவ்வண்ணமே நடந்து விட்டது: புத்திரனை இச்சித்திரு
ந்த நான் வீதிஹோத்ர ரிஷியின் வரவைக்கண்டு எதிர் சென்றழை
த்து உபசரித்து அவரது பாத தீர்த்தத்தை உன்தலையில் தெளித்
தேன். உன் தலையில் இருந்த ஒன்பது திவிலைகளும் உருண்டு கீழே
விழுந்து விட்டன. பிரியபத்தினியாகிய முரையின் சிரசில் தெளித்த
போது, ஒரே திவிலையாக அசைவற்றிருந்தது கண்டு, "இதன் கார
ணம் என்ன" வென்று மஹரிஷியை நான் கேட்டேன். அவர் "அலை
கள் ஓய்ந்த பின் சந்திரபிம்பம் ஒன்றே இருக்கும்" என்று பதிலளி

த்ததன் அர்த்தம் இப்பொழுது தான் புலப்பட்டது.நாம் இனி துக்கப்படுவதில் யாது பயன்? முன் சென்றதெல்லாம் கனவெனத் தள்ளி,விவேகத்தை யடைந்து,நமக்கும் இனி நற்கதி கிடைக்க வேண்டுமென்று ஈசுவரப்பிரார்த்தனையுடன் காலங்கழிக்க வேண்டுமேயன்றிப் பிரலாபித் தழுவதிற் பயனில்லை''யென்று தேற்ற ஸுநந்தா தேவி மௌனமாயிருந்தாள்.

ராஜ ஸ்திரீகள் ஸஹகமனம் செய்வது நிச்சய மென்றறிந்த் தாதிமார்கள் வாய்விட்டலறத் தொடங்கினார்கள். அவர்களுடைய "ஹா! ஹா!!" கார மானது பட்டணத்தைப் பிளந்துகொண்டு செல்வது போலிருந்தது. நகரிலுள்ள ஜனங்களெல்லோரும் அந்தப்புர வாயிலில் கூட்டமாகக் கூடிக் கதறி யழுதார்கள்.

நந்த பத்தினிகள் தங்களிட மிருக்கும் வஸ்துக்களை ஏல் கவிகளுக்குத் தானமாக வாரிக் கொடுத்து அவஸரமாகப் நிலம் பட்டுப் புயற்காற்றினால் தரையில் விழும் வாழை மரங்கள் /ப்பத விருத்த ராஜ தம்பதிகளுடைய காலில் விழுந்து, கடைசி நமஸ்கார ரத்தைச் செய்துவிட்டு ராஜத் துவாரத்திலிருந்து வெளிவந்தார்கள்.

வி. பாலம்மாள்.

துருவச் சரித்திரம்.

(137-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

அனேக ஜகத்துக்களைத் தன்னிடம் அடக்கிக்கொண்டிருக்கிற உத்தம வஸ்துவினிடத்தில் தன் சித்தத்தை நிறுத்தி விட்டபடியால் இவன் செவியில் இம்மொழிகளில் யாதொன்றும் எவ்வளவேனும் புகவில்லை. அனேக நிசாசரர்கள் சூலமுதலிய ஆயுதங்களால் துருவனைக் கொல்ல வந்தனர். ஸ்ரீதரனிடத்தில் சித்தத்தை நிலை நிறுத்திய துருவனுக்கு வேறொன்றும புலப்படாமல் ஜகமெங்கும் விஷ்ணு மயமாகத் தோன்றிற்று. அதனால் அரக்கர்கள் அவமானத்தை அடைந்து திரும்பிப் போயினர். தாம் பிரயோகித்த மாயைகள் அனைத்தும் பிரயோசனமின்றி நாசமடையக்கண்ட தேவர்கள், மகாத்மாவான துருவனுடைய தபோ மகான்மியத்தால் தங்களுக்கு 'என்ன நேரிடுமோ' வென்று பயப் பிராந்தியை அடைந்தவர்களாய், நடுநடுங்கி, விஷ்ணுலோகத்திற்குச் சென்று, லக்ஷ்மிபதியான ஸ்ரீகோவிந்தனைச் சரணாகதியாக வடைந்து ':ஹே! வைகுண்ட வாஸா! மதுஸூதநா! ஸர்வ லோகைக நாயகா! சக்ரேசா! சரணம், சரணம். அரு மறைகளாலும் அறிதற் கொண்ணா அச்சுதா! ஓலம், ஓலம். எங்களைக் காத்தருளவேண்டும். துருவராஜன் தன் தபசின் பிரபாவத்தால் ஜகத்தை யெல்லாம் தபிக்கச் செய்கிறான். இந்திர, வருண, குபேர, சூரிய சந்திராதிகளுடையபதவிகளில் எந்தப் பதவியையோ

அபேக்ஷித்துக் கொடுந்தவம் புரியுமிவனைத் தவத்தினின்று திருப்பாவிடில் உலகெல்லாம் அழிந்து விடுமென்பதிற்கு ஐயமில்லை. அவன் தபோக்கினியைச் சகிக்க எங்களால் முடியவில்லையென்று விண்ணப்பம் செய்து கொண்டனர்.

இங்ஙனம் பிரார்த்தித்த தேவரை நோக்கி ஸ்ரீமந் நாராயணன் "ஓ! அமரர்களே! துருவன் இந்திரபதமாவது, வாயுபதமாவது, அபேக்ஷிக்கிறவனல்லன். அவன் மனோரதத்தை நான் அறிவேனாதலின் அவனுக்கிஷ்டமான வரத்தையளித்து அவனைத் தவசிலிருந்து நிறுத்துகிறேன். நீங்கள் உங்களுடைய ஸ்தானத்தைக் குறித்துச் செல்லுங்கள்" என்றனர். ஸ்ரீ மகாவிஷ்ணுவின் வசனத்தைக் கேட்டுத் தண்டம் ஸமர்ப்பித்துச் சந்தோஷத்துடன் தேவலோகம் போய்ச் சேர்ந்தனர் தேவர்.

த்தி பின்பு சாக்ஷாத் ஜகதீசன் சங்க சக்கர பீதாம்பர தாரியாய், யுத்த வாகனாரூடராய் பாலனாகிய துருவனுக்குக் காட்சி கொடுத்து, செய்வ பிக் "ருவா! பகிர் வியாபாரத்தை விட்டு அந்தர்முகமாய் என்னைப் செ த்து எனக்கு வெகு சந்தோஷத்தை உண்டாக்கிய படியால் உன அபீஷ்டமான வரத்தை அளிக்க வந்திருக்கிறே"னென்று சொல்ல, துருவன் கண்களை விழித்துப் பார்த்து, "ஆ! ஆ! ஸாக்ஷாத் பகவான் நேரே வந்து விட்டா"ரென்று ஸாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து, தேகம் புளகிக்க, பயபக்தியுடனே, தேவ தேவனைத் துதிக்க நினைத்து, "ஓ ஸ்வாமிந்! உன்னை ஸ்தோத்திரஞ் செய்யவேண்டுமென்று எனக்கு இச்சையிருக்கிறது. ஆனால் பிரமாதி தேவர்களும் உன்னுடைய பிரபாவத்தைச் சொல்ல அசக்தர்களாயிருக்கிறார்களென்றால், அறிவிலாச் சிறியேனாகிய யான் எப்படித் துதிப்பேன்? உன்னை ஸ்தோத்திரஞ் செய்ய நினைக்கும் அடியேனுக்கு அதற்கேற்ற ஞானத்தையும் உன்னிடத்தில் இடையறாத பக்தியையும் தந்தருளவேண்டும்" என்று சொல்லி அஞ்சலிபண்ணி நின்றனன். இங்ஙனம் நின்ற பாலனாகிய துருவராஜனை, ஸ்ரீ கோவிந்தன், சகல கலாமயமான சங்கத்தினுனியால் ஸ்பரிசித்தார். அதனால் ஞானோதயமாகி அவன் அச்சுதனைப் பலவாறாக ஸ்தோத்திரஞ் செய்யலானான்.

எல்லாப் பொருட்கும் காரணனாய், எவற்றின் கண்ணும் வியாபகனாய்,
எல்லாவற்று மிருக்கின்றாய் எளியேன் கருத்தும் அறிவாய் நீ.
சொல்லாற் புகல்வ தொன்றுளதோ? சுரரு நின்னால் வாழ்கின்றார்
வல்லாய் அடியேற் கழியாத வாழ்வுமினிது தருவாயே.

என்று போற்றிய துருவனைப் பார்த்து, எம்பெருமான், "ஓ! துருவராஜனே! யாவனொருவன் என்னை மனோ வாக்குக் காயங்களால் வழிபடுகின்றானோ, அவனுக்குச் சாசுவதமான பதவியைக் கொடுத்து அவன் மனோரதத்தை முடிப்பேன். நீ பூர்வ ஜன்மத்தில் அந்தணர் குலத்தில் ஜனித்தவன். உன்னுடைய மாதாபிதாக்களுக்கு சிசுருஷை

செய்து நீதி நெறிவழுவாமல் என்னையும் ஏகாக்ர சித்தத்துடன் பஜித்துவந்தாய். உனக்கு யௌவனபருவம் வந்தடைந்த காலத்து, ஒரு ராஜகுமாரனது சிநேகம் பெற்று அவனுடைய துர்லபமான ஐசுவரிய போகாதிக ளிடத்து ஆசைகொண்டு, ராஜபுத்திரனைப் பிறக்க இச்சித்தாய். அவ்வண்ணமே உன் மனோரதத்தை நிறைவேற்றினேன். இப்போதும் உனது பக்தியால் என்னை மகிழச் செய்தாயாதலின், சூரிய சந்திரர் அங்காரகன், புதன், பிரகஸ்பதி, சுக்கிரன், சனி முதலியோரது ஸ்தானங்களுக்கும், நட்சத்திர மண்டலங்களுக்கும், அதிக உன்னதமான ஸ்தானத்தை யடைந்து, (ரிஷிகள் தேவதைகள் முதலியோர் அழிந்து போனாலும் நீயழியாமல்) கற்ப கால பரியந்தம் அந்த ஸர்வோந்நத ஸ்தானத்தில் சுகமாக இருக்கக்கடவாய். யாவனொருவன் சாயங்காலத்திலும் பிராதக் காலத்திலும் உன்னை ஸ்தோத்திரஞ் செய்கிறானோ, அவனுடைய பாவங்களெல்லாம் நிவர்த்தியாகி, சொர்க்கத்தில் வாசஞ் செய்வான். நீ சிலகாலம் உன் பிதாவின் ராஜ்யத்தை அரசுசெய்து, அந்தியத்தில் இப்பதவியைப் பெற்று, நவக்கிரகங்கள் முதலியவைகளுடைய சூத்திரத்தைப் பிடித்து, அவைகளை இயக்கிக்கொண்டு நிலைதளராமல் சாசுவதமான ஸ்தானத்திலிருந்து வாழக் கடவாய்" என்று வரங்கொடுத்து வைகுந்த நாதன் அந்தர்த்தான மாயினார்.

பின்னர் முனிவர்களால் இச்செய்தியை உணர்ந்த உத்தானபாதன் சதுரங்க சேனா சமூகத்துடன் மதுவனத்தை யடைந்து தன் குமாரனைக்கண்டு பலவிதமாய் ஆறுதல்செய்து நகரத்திற்கு அழைக்க, துருவ ராஜன், தனக்கு அரசாட்சியில் விருப்பில்லையாயினும், தந்தை முதலியோரின் வேண்டுகோளாலும் கடவுளின் ஆக்ஞையை மறுத்தற் கியலாமையாலும், பிதாவின் மொழிக்கிணங்கித் தந்தையுடன் நகரத்திற்குச் சென்று, அவனால் முடி சூட்டப் பெற்று, அநேக காலம் மனுநீதிப்படி அரசியற்றி, அந்தியத்தில் நவக்கிரகங்களுக்கு அழிவு நேரிடினும் தனக்கோ ரழிவில்லாமல் ஆகாயத்தின் கண்ணுள்ள கிரகங்களும் நட்சத்திரங்களும் மற்றவைகளும் தன்னை யாற் செல்ல, தான் அசைவற்ற சாசுவத பதவியைப் பெற்று அனவரதமும் அனந்தனை ஆராதித்துக் கொண்டிருக்கிறான்.

துருவச் சரித்திரம் முற்றிற்று.

அநதாரி.

"மிண்டரை வெல்லும் வளர்சிங்க ராயன் விலைகொடுப்பத்
தண்டமிழ் மேகம் உரத்தூரில் வேதியன் ருனும்விற்பக்
கொண்டவன் பின்சென்று மண்டலத் தேபுகழ் கொண்டபிரான்
தண்டமிழ்க் கும்பன் அநதாரி யுந்தொண்டை மண்டலமே"

—தொண்ட மண்டல சதகம்.

தண்ணிய தமிழ்க்கவியை மேகம், மழைபொழிவது போலச் சொல்ல வல்லவராகி *ஊரத்தூரிலேயிருந்த ஓர் வேதியப் புலவரிடத்து, தொண்டை நாட்டு வயற்பதியிலுள்ள அநதாரி என்பவர் தமிழ் கற்றுவந்தனர். இவரது தமிழ்ப் புலமையைக் கேள்வியா லுணர்ந்த §"கன்றுப்பூர் சிங்கராயன்" என்பான், அவரைத் தன்பால் வைத்து ஆதரிக்கும் நோக்கங்கொண்டு அவ்வேதியரிடத்துச் சென்று, அப்புலவனைக் கேட்ப, வேதியர், பொருள்பெறு நிமித்தம் அவரைவிற்றுவிட்டனர். ஆசிரிய ராணையை மறுத்தற் கஞ்சித் தமிழ்றிவில் கும்பமுனியை நிகர்ந்த அவ் அநதாரி, திட்டமை வென்று புகழ்பெறுவோனாகிய சிங்கராயன் பின்னே சென்று வாழ்ந்தனர். இவ்வாறு தம்மை விற்றும் புகழ்கொண்ட பெருமையுடைய அநதாரியார் சிறந்ததும் இத் தொண்டைமண்டலத்தேயே என்பது இச்செய்யுட் கருத்து.

வரலாறு:— அநதாரி என்பவர், கோழைபடா மேழிச்செல்ராகிய வேளாண்மரபினர். இவர் தொண்டைநாட்டுத் திருக்கழுக்குன்

* நீடாமங்கலம் ரயில்டேஷனுக்கு மேற்கில், அரைமைலில், கோரையாற்றிற்கு மேற்கிலும், பாமணியாற்றிற்கு கிழக்கிலும் உள்ள சிற்றூர் இது. இதுவன்றி, மன்னார்குடிக்குத் தென்கிழக்கில் 8 மைலில் கீழவூருக்கணித்தாயும் ஓர் "ஊரத்தூர்" காணப்படுகிறது. இவ்விரண்டிலும் "வண்டமிழ் மேகமூரத்தூர் வேதியன்" எனவரும் தொடரில் குறித்த 'ஊரத்தூர்' இதுவெனத் துணியக் கூட வில்லை.

§ இது நன்னிலந்தாலூகா திருநாட்டியத்தான்குடி ரயில்வே ஸ்டேஷனிலிருந்து கிழக்கு 8மைலிலுள்ளதோர் பாடல்பெற்ற சிவஸ்தலம். சுவாமி கன்றுக்குட்டி கட்டும்படியானஆப்பு அல்லது குற்றியிலிருந்து உற்பத்தியானவர். இக்காரணத்தால் அவ் ஊருக்கு "கன்றப்பூர்" என்றும் பெயருண்டாயிற்று. இவ்வூரைப்பற்றிய விசேட வரலாறொன்று அடியில்வருமாறு வழங்கப்படுகிறது.

கன்றுப்பூரிலுள்ள அரும்புடையான் என்னும் வேளிரது மகனாகிய ஆதிவராகனுக்குத் திருநாட்டியத்தான் குடியிலுள்ள பசுமவேளார் என்னும் பெயருடையார் பெண்ணை மணமுடித்தனர். ஆதிவராகன் வைணவ பக்திமிக்குடையவன். பெண் சிவபக்தி மேலிட்டவள். இருவர்மனமும் வெவ்வேறு கடவுளர்பால் ஈடுபட்டிருந்தன. ஆயினும், பெண் தான்கொண்ட நியமந் தவறாது கணவன்வீட்டு மாட்டுத்தொழுவத்தில் கன்றுக்குட்டி பிணைக்கும் ஆப்பை இலிங்கமாகப் பாவித்து நாடோறும் கறக்கும்பாலில் கொஞ்சம் அபிஷேகஞ்செய்து பூசை முறையினைக் கையாண்டு வந்தாள். தினந்தோறும் தொழுவத்தில் கன்றுமுளையில் பால் சிதறுண்டிருப்பதைக் கண்டறிதலில் கவனஞ் செலுத்தியபோது, மனைவியின் உளவறிந்து மிக முனிந்த கணவன், இரணியன் பிரகலாதனைக்கேட்டவாறு, "நீ வணங்கும் இறைவன் இத்தறியினிடத்தும் வருவானோ" என்றபோது "ஆம். வருவான்" என்று, மெய்யன்பு நிறைந்த அப்பெண், தன்மொழியை மெய்ப்பிக்குமாறு சிவபெருமானை வேண்டலும், அப்பெருமான் சுயம்புவாக அவ்வாப்பினிற் றோன்றி. இருவருக்கும் விடளித்தனர். "கன்றப்பூர் நடுத்தறியைக் காணலாமே" என்று சைவ சமயாசாரியார் வியந்தோதி இருப்பதையும் உணர்க.

றத்திற்கு அணித்தாயுள்ள சதுரங்கபட்டணத்திற்குத் தெற்கே நான்கு மைல் தூரத்தில், சேயாற்றின் சங்கமத்திற் சுருகிலுள்ள "வாயலூரி"ல்பிறந்தவர். கன்றூப்பூர்க்கு அதிபனுன சிங்கராயன், தமிழபிமானம் மிகுந்தவனுதல்பற்றி, புலமை மிகுதியுடைய அந்தாரியுடன் கல்வி சம்பந்தமாக அவ்வப்போது இனிய சம்பாஷணை செய்து வந்தான். அப்பொழுது அந்தாரியின் கல்வித்திறம் நாடெங்கும் பரவியது. "கன்னே" என்னும் ஊரில், காணி வளத்தாலும், செல்வமிகுதியாலும், புகழ்நலத்தாலும் தலைசிறந்து நின்ற "தண்டாயுதன்" என்னும் வேளாண்பிரபுவுக்குச் "சிங்காரயன். அந்தாரியைக் கொண்டு ஓர் சீட்டுக்கவி எழுதச் செய்தான் என்பதைப் பின்வரும் செய்யுட்களால் அறிக.

"ஒட்டிற் பொலிய வான்பசுவொன் றெழுதுங் கன்றூப் புடைராயன்
சீட்டுக் கவிகை அநதாரி செப்புந் தமிழின் திறனறிந்தோன்
நாட்டிற் புகழ்கன் னேக்குடையான் நாளுந் தண்டாயுதன்பெருமை
வாட்டுப்படுமோ அவன்காணி வளஞ்சேர் சோழ மண்டலமே."

"திரம்பெறுகன் றுப்புடைய சிங்கப் பெருமான்
னுரம்பெறுதண் டாயுதனுக் கோலை—பெரும்பகலே
யந்திவரு நீநினைந்தா லல்லவென்று லுங்காலம்
பிந்திவருமுந்திவரும் பேச்சு."

இங்ஙனம் பேரும், புலமை மிகுதியும் பெற்ற அநதாரியின் புகழ் பல திக்கிலும் பரவ, திரிசிராப்பள்ளிக் கடுத்த ஸ்ரீரங்கத்துக்கு நேர்வடக்கே கொள்ளிடத்தின் வடகரையிலிருக்கும் "மன்றச்சநல்லூர்" என்னும் ஊருக்குத் தலைவனும், "கச்சிவீரப்பன்" என்னும் மதுரை அரசனுக்கு அமைச்சனும், செல்வந்தியின் துணைவனும், படைத்தலைவனுமாகிய "திருவிருந்தான்" என்னும் உபகாரிவேண்ட, வடமொழியிலிருந்த சுந்தரபாண்டியன் கதையைத் தமிழில் வாயற்பதி அநதாரியார் பாடித் திருவாலவாயுடையார் திருக்கோவில் அறுகாற்பீடத்தில் 'திருவிருந்தான்' சபையில் அரங்கேற்றப் பெற்றதென்த்தெரிகிறது. இது "சுந்தரபாண்டியம்" என்னும் திருவிளையாடற் புராணப் பாயிரத்தில்

"மதுரை நாயகன் சுந்தர பாண்டிய வடநூற்
கதிரு லாமணி யாறுகாற் பீடத்திற் கல்லூ
ரதிப ஞந்திரு விருந்தவ னவையினில் வாயற்
பதியில் வாழநதாரிசெந் தமிழினிற் பகர்ந்தான்"

"அன்னவன் அரசர் சூழுங் கச்சிவீ ரப்ப னென்னு
மன்னவ னருள்சேர் மன்றைச் செல்வந்தி துணைவன்வாய்மைத்

தென்னவன் திருவிருந்தான் சவுந்தரன் றேவ பாடைத்
துணிருங் கதைதென் னூலாற் செல்கெனச் சொல்லலுற்றேன்"
—(சுந்தரபாண்டியம், நக்ரச்சருக்கம்)

என வருவனவற்றா லறிக.

இனி, பாகவதப் புராணத்தைப் பாடியவர், இவ் அநதாரி என்பது சிலருடைய அபிப்பிராயம். அது தவறென்பதை வித்துவான் ஸ்ரீ ரா. ராகவையங்கார் தக்க ஆதாரங்காட்டி விளக்கியுள்ளார். பாகவதபுராணம் பாடியவர் சேதுநாட்டு வேம்பத்தூரில் விளங்கிய "செவ்வைச்சூடுவோர்" என்னும் புலவர் பெருமானென்பது,

"கதிக்குமறுபிறப்பொழித்துக் கதிகொடுக்கும்பாகவதக்கதையைமுன்
மதிக்குமுயர்வடமொழியாற் புனைந்தருளவியாதமுனிவரனே மீள [ன
வுதிக்குநிம்பைமாதவபண் டிதச்செவ்வைச்சூடியெனவுலகுபோற்ற
விதிக்குமறையவர்குலத்திற்றேன்றியருந்தமிழாலும்விளம்பினனே"

எனவரும் பாடலாலும, "தென்னிம்பை நகரமதில் வாழுமந் தணரிற் சிறந்தசெவ் வைச்சூடுவார்... சுருதிபுகழ் பாகவத பௌராணம் ஓதினர்." என்பதாலும் அறிக.

இவ்வாறு செவ்வைச்சூடுவார் பாடியதை "ஆரியப்புலவர்" பாடியதென மயங்கிக்கூறுவது, அந்நூல் இறுதியில் அபியுக்தர் ஒருவர் கூறிய "நேரிசைவெண்பா" எனத் தலைப்பிட்டு

"கம்பனென்றுங் கும்பனென்றுங் காளியொட்டக்கூத்தனென்றுங்
கும்பமுனி யென்றும்பேர் கொள்வரோ—அம்புவியில்
மன்னு வலர்புடைசூழ் வாழ்குடந்தை யாரியப்பன்
அந்நாளி லேயிருந்தக் கால்."

எனப்பதிப்பிக்கப் பெற்றதாலேயே. இதற்கேற்ப, தொண்டைமண்டலசதகத்தில், "கம்பனென்று" எனவரும் மேற்கோள் செய்யுளின் மூன்றுமடி "மன்னுவலர் பரவும் வாயலநதாரியப்பன்" என்றும் பாடபேதங்கொண்டுள்ளது. இவ்வாறு பிறழ்வுபட்டு வழங்குவதற்குக் காரணம்யாதென ஆராயுமிடத்து, வாயல் என்பதைக் குடவாயில் எனவும், அநதாரியப்பன் என்பதை அந்தாரியப்பன் எனவும் கருதிப் பொருள் கொண்டதெனலாம். "ஆரியப்பன்" என்னும் பெயர் மாறுபட்ட இவ்வெண்பாவிலன்றி மற்றெங்கும் கேட்கப்படுவதில்லை. இதனால் அநதாரி பாகவதம் பாடவில்லை என்றும் மதுரைப் புராணங்களில் ஒன்றாகிய சுந்தரபாண்டியமே பாடினார் என்றும் இங்குணர்த்தப்பட்டது.

சி. கு. நாராயணசாமி முதலியார்,
கோயமுத்தூர்.

ஓம்

ஆத்திசூடி வெண்பா.

(86-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

கற்றதுகைம் மண்ணளவு கல்லா துலகளவென்
றுற்ற கலைமடந்தை ஓதுமியல்—முற்றநன் மெய்ப்
போதமுறும் ஔவை புகன்றனளால் எப்பொழுதும்
ஓதுவதொழியே லுற்று.

(இ-ள்) கற்றது—ஒருவர்கற்ற கல்வி, கைம்மண்ணளவு—கைக்குள் அடங்கிய மண்ணின் அளவாகும், கல்லாது—படியாதநூல்களோ வென்றால், உலகளவு என்று—பூமியின் அளவென்று, உற்ற கலைமடந்தை—கலைக்குச் சொந்தமான சரஸ்வதி, ஓதும் இயல்—கற்கும் இயல்பை, முற்ற நன்மெய்ப் போதமுறும்—முழுதும் உண்மை ஞானத்தையுடைய, ஔவைபுகன்றனள்—ஔவை சொன்னாள், ஆல்—ஆதலால், எப்பொழுதும்—, உற்று—மனம் பொருந்தி, ஓதுவ தொழியேல்—கல்வி பயில்வதினின்றும் நீங்காதே.

தாய்வயிற்றிற் பிறந்த க்ஷணமே "இட்டமுடன் என்தலையில் இன்னபடி என்றெழுதி; விட்ட சிவனும் செத்து விட்டானோ" எனக்கவி கூறிய ஓதாதுணர்ந்த மாதரசி, நாமகள் நாளைக்கும் கற்கும் விதம் அறிவித்துள்ளாள். கலைமகளே கற்பளாயின், ஏனையோர் தாங்கள் 'முற்றக்கற்றோ' மென்று கருதுவது எவ்வாறு பொருந்தும்?

பாரதம் பாடிய வில்லிப்புத்தூராரது திருமகனாகத் தோன்றிய வரந்தருவார், "தமிழ்ப்பாவை 'வளர்ந்தாள்' ஏனது 'வளர்கின்றாள்' " என்க் கல்விக்கு முடிபுரை கூறாது எச்சமாக வுரைத்ததையும் உற்றுநோக்குக.

கம்பரும், "புத்தகம் படிகமாலை குண்டிகை பொருள்சேர் ஞான வித்தகந்தரித்த செங்கை விமலையை" என்று நாமகள் வணக்கம் கூறியபோது, முதற்கண் புத்தகத்தினையே கரபூஷணமாக வர்ணித்தனர். நிற்க.

"என்னொருவன் சாந்துணையும் கல்லாதவாறு?" என்ற தேவர் வாக்கும் நன்கு சிந்திக்கத் தக்கதே. இங்ஙனம் கற்பதனால் உண்டாகும் இம்மைப்பயன் யாதெனில் "உணர்வும் ஒழுக்கமுமே" இதனை "ஓதாதார்க் கில்லை உணர்வோடு ஒழுக்கம்" என மூதாட்டியார், ஆத்திசூடியின் விருத்தியெனத்தகும் 'கொன்றைவேய்ந்தா'னிற் கூறியிருப்பது கொண்டு அறிக. இம்மையில் அவை பெறப் பாக்கியமில்லார்க்கு 'எப்போதேனும் அவை நிச்சயம் கிட்டும்' என்பதை வலியுறுத்தவே

"ஒருமைக்கட் டாங்கற்ற கல்வி ஒருவற்(கு)
எழுமையும் ஏமாப் புடைத்து"

என வள்ளுவர் ஆறுதல் கூறியதென்க. ஓதுவது முக்கியமாயினும்,

"கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கிற் பிணிபல—மெல்லவே
ஆராய்ந்(து) அமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகிற் றெரிந்து."

அசலாம்பிகையம்மாள்.

அகச்சான்று அல்லது மனச்சாட்சி.

(148-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

ஒருவனை ஒருவேலை செய்யும்பொழுது அவன் அகச்சான்று தடுப்பதற்கும், மற்றொருவன் அதே வேலை செய்யும்பொழுது அவன் அகச்சான்று அவனைத் தடை செய்யாதிருப்பதற்குங் காரணமென்ன? இதன் காரணத்தைக் கண்டு பிடிப்பதன் முன்னரே, "அகச்சான்றென்பதென்ன" வென அறிந்து கொள்ள வேண்டும்.

அறிஞர், "அகச்சான்றென்பது, 'சென்ற பிறவிகளில் அநுபவித்(அடைந்)த இன்ப துன்பங்களின் நினைவு" என்று நன்காய்ந்து நிலைநாட்டியுள்ளார்கள். நாம் முற்கூறிய லஞ்சம் வாங்கும் வேலைக்காரனை இரண்டாவது முறையும் ஆராய்வோம். அவன் லஞ்சம் வாங்குகின்றான்; அது வெளியானதும், அரசாங்கத்தாரால் அவன் தண்டிக்கப்படுகின்றான்; அவன் சிறையிலிருந்து மிகுந்த துன்பத்தை யடைகின்றான்; அவனது அறிவு மிகுந்த கலக்கத்தை யடைகின்றது; முடிவில் இறந்தும் போகின்றான். அவன் பிறகு ஒரு மனிதனாய்ப் பிறந்து மறுபடியும் அதேமாதிரி ஒரு வேலைக்காரனாகின்றான். அவனிடம் அப்பொழுது ஒருவன் லஞ்சங் கொடுக்க வந்தால், அச்சமயம் அவன் சென்ற பிறவியில் இச் செய்கையாலடைந்த துன்பத்தை நினைந்து அவனது ஆத்மாவானது, "வேண்டாம்! அதைச் செய்யாதே!" என்று (அகச்சான்று மூலமாக) அவனை விலக்குகின்றது. அல்லது அவனுக்குப் பழைய அநுபவத்தை நினைப்பூட்டுகின்றது.

நமது வினைக்கேற்றவாறுதான் நமக்குப் பிறவி யுண்டாகின்றதென்று நாமனைவரு மறிவோம். சென்ற பிறவியின் நிலைமையை இப்பிறவியில் நினைவிற்குக் கொண்டு வரப் பெரும்பாலர்க்கு மியலாததாகும். ஆனால், அப்பொழுது உண்டாயிருந்த அநுபவங்களை நினைத்திருக்கின்ற ஆத்மாவானது நமக்கு இப்பிறவியிற் கிடைத்துள்ள புதிய அறிவினுடையவும், புதிய உள்ளத்தினுடையவும், வழியாக அவ்வநுபவங்களை நமது நினைவிற்குக் கொண்டுவர முயற்சி செய்கின்றதெனினும், "அகச்சான்"றென்னும் ஆற்றலின் வாயிலாகத்தான் அவற்றை நமக்கறிவிக்கின்றது. சென்ற பிறவியிலே,

அல்லது சில பிறவிகளிலோ, வஞ்சம் வாங்கிப் பலதுன்பங்களை யடைந்து வருந்தியுள்ள ஒரு ஆத்மாவானது "அகச்சான்று" வழியாக, "அதைச்செய்யாதே" என்று தடுத்ததை முற்கூறிய இரண்டாவது வேலைக்காரன் நன்குணர்ந்து, ஒழுங்காக அதனை ஏற்றுக் கைக்கொண்டு வருகின்றான். நிற்க.

ஆத்மாவின் முன்னேற்றத்திற்கு உதவியாக வேண்டியிருப்பவற்றுள் முதலாவது அது வாழு முடலைத் தூய்மையானதாகச் செய்து கொள்வதாகும். நாம் உண்ணும் பொருள்கள் தூய(பரிசுத்தமான) வாயிருத்தல் உடலைத் தூயதாக்கிக் கொள்வதற்கான ஒரு வழி. புலாலுண்பதுங் கட் குடிப்பதும், மற்று மிவ்வாறுகிய பல தீச்செயல் புரிவதும், உடலை இழிவாக்குகின்றன. இத்தகைய இழிந்த உடலில் வாழ்ந்த ஆத்மாவானது அவ்வுடலை விட்டு நீங்கி மற்றோருடலிற் புகு முன்னரே யுள்ள ஒரு நிலைமையில் அக்குற்றத்தை யுணர்கின்றது. ஆதலால், மறு பிறவியிலும் புலால், கள் முதலியவற்றை யுட்கொள்ள நினைக்கும்பொழுது அவ்வான்மாவானது அகச்சான்றின் வாயிலாக "அந்தத்தவிர்! புலாலுண்ணாதே! கள்ளைக் குடியாதே! மற்று மெந்தத் தீவினையும் புரியாதே! அதனால் நீ யிருந்த குற்றமுடையவனாய் யளவற்ற துன்பம்பட வேண்டி வரும்! ஆதலால் "தீவினை யகற்று!" என்று எச்சரிக்கை செய்து தீமை செய்ய வொட்டாது விலக்குகின்றது. அவ்வாறுள்ள ஒருவனே நாம் மேற்கூறிய உதாரணத்திற் குரியவன்.

அகச்சான்றென்பது சென்ற பிறவியில் ஆன்மா அடைந்துள்ள அனுபவத்தைப் பின்பற்றியுள்ள மெய் உபதேசஞ் செய்கின்ற ஓர் வல்லமையாகும். ஆதலாலனைவரும் அதன் கட்டளைகளை நன்கு மதித்து மறவாது கைக்கொண்டு நடக்க வேண்டும். அது எப்பொழுதும் மேலான நிலைமையையே கோரி நிற்கும். ஆதலால் அதனை யிகழ வொண்ணாது. அதற்குப் பகையான எச்செய்கைகளிலுந் தலையிடாது அதற்கெவ்வளவு மதிப்பு வைக்கின்றோமோ அவ்வளவு உயர்ந்த நிலையை நாம் அடைவது திண்ணம். இப்பிறவியி லதனைப் போற்றி மதித்து வந்தால் மறு பிறவியிலும், மேன்மையுற்று ஈற்றில் அழிவிலாப் பேரின்ப மெய்தலாம். சுபம்.

R. S. கிருஷ்ணதேசிகசர்மா.

நன்மொழி:

நல்லோர்

நல்லினஞ் சேர்தல், புல்லினந் தவிர்தல், ஐம்புல னடக்கல், தன்புற்ற பிராணிகளிடம் தயை யுடைமை, பிறரது நற்குணங்களிற் பிரீதி, குருபக்தி, தெய்வ வணக்கம், அடக்கம், செய்ந் நன்றியறிதல், செல்வச் செருக் கின்மை, பிறனில் விழையாமை, வெஃகாமை, புறங் கூறாமை, பயனில சொல்லாமை, கொல்லாமை முதலிய குணங்கள் நல்லோரிடம் நிலைத் திருக்கின்றன.

"எனைத்துணையும் தீயவே செய்பினும் நல்லவாக் காண்பவே மாசில் மனத்தினவர்" என்றபடி, பிறர் செய்யும் தீமையையும், நல்லோர் குணமாக் கொள்ளுவர். "என்றும் முகமன் இயம்பாதவர் கண்ணும் சென்று பொருள் கொடுப்பர் தீதற்றோர்." கனிகள் நிறைந்த மரங்களும், கார்முகிலும் போல அவர்கள் கைம்மாறு கருதாது உலகிற்கு உதவி புரிவர். நல்லினஞ் சேர்தலால் வரும் நன்மையைப் பர்த்ருஹரி நீதி சதகச் செய்யு ளொன்றின் தமிழ் மொழி பெயர்ப்பாகிய

* "ஸாதுமா சங்கம் தமோகுணம் நீக்கும்;
ஸத்திய வாக்கினர் ஆக்கும்;
தீதிலா துயர்ந்த மதிப்புறச் செய்யும்;
தீப்பழி பாவமும் போக்கும்;
ஈதலாற் புனித மனமுறப் புரியும்;
எண்டிசை யினும்இசை பரப்பும்;
ஓதுநா னிலத்தோர்க் கேரங்குமற்றி தனால்
உற்றிடா நன்மையா துளதே?"

என்ற செய்யுளால் அறிக.

மனச் சுத்தியும் தொழிற் சுத்தமும் ஒருவனுக்கு அவன் சேர்ந்துள்ள இனச்சுத்தத்தினால் தான் உண்டாகும். இவ் இனச் சுத்தமுள்ளார்க்கு சகல நன்மைகளும் விளையும். யுதிட்டிரர் தூயமனத்தரான வேதவியாசர், தௌமியர் முதலிய நல்லாரோடு பழகி, அவர்கள் கூறியபடி நடந்து வந்தமையின், சகல கஷ்டங்களையும் சகிக்கும் ஆற்றலும், முடிவில் இழந்த ராஜ்யமும், பகவானேயான ஸ்ரீகிருஷ்ணனது பேருதவியுமுற்றுப் பெற்றார்.

---

* அறநெறித்தீபிகை நீட்டு—(முதற்பாகம்) (விலை அணா—10)

"மாதுறக்கம் என்றுரைத்தார் மாந்தரீர் கேண்மினே
சாதுக்கள் கூட்டுறவு தான்" (ஆதலின்)

நல்லாரைக் காண்பதுவும் நன்றே. நலமிக்க
நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே—நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே. அவரோ(டு)
இணங்கி இருப்பதுவும் நன்று.

எம். எம். நாராயணஸ்வாமி ஐயர்.
முடிகொண்டான்.

கமலாவதி.

அங்கம்—5.

காட்சி—1.

இடம்.—மாளவநாட்டில் ஓர் ஆலயமும், அதையடுத்ததோர் சோலையும். காலம்.—மாலை.

[ஸ்ரீதரனும் ஜயகேசரியும் வார்த்தையாடிக்கொண் டிருக்கிறார்கள்.]

ஜய. அரசே! சற்றுப் பொறுங்கள். இருவரும் வருகின்ற சமயந்தான். சீக்கிரம் கமலாவதியை அடைவீர்கள்

ஸ்ரீ. நாம் இங்குவந்து நெடு நாழிகையாய் விட்டதே! ஒருக்கால், அவன் வருவதற்கு இசைய வில்லையோ?

ஜய. அந்தச் சந்தேகமே வேண்டாம். அவனு இங்கு வரச் சம்மதியான்? [ஒரு திசையைக் காண்பித்து]
அதோ பாருங்கள்! இருவரும் வந்து விட்டார்கள்.

ஸ்ரீ. உண்மைதான். யாரோ இருவர் வருகின்றாப் போல் தானிருக்கின்றது! அவர்கள் தானோ?

ஜய. ஆம், அவர்களே. சந்தேகமில்லை.

ஸ்ரீ. சரி, நாம் இனி செய்ய வேண்டிய தென்ன?

ஜய். நாம் இருவரும் ஒருபுறமாக மறைந்து இருக்க வேண்டும். தங்களை அழைக்கும் வரையும் மறைவிடத்திலேயே தாங்கள் இருக்க வேண்டும். மற்றவைகளை நான் பார்த்துக் கொள்ளுகின்றேன். சரி, அவர்கள் சமீபித்து விட்டார்கள், அதோ. இனி நாம் இங்கிருப்பது சரியல்ல.

[இருவரும் ஒருபுறமாக மறைந்து கொள்ளுகின்றனர். சற்றுத் தாமதித்துக் கோரசேனனும், கமலாவதியும் பிரவேசிக்கிறார்கள்.]

கோ. கண்ணே! இத்தனை நாளைக்குப் பிறகாவது என் மீது—

கம. ஸ்! என்ன தாங்கள் முன்பு அளித்த வாக்கை அதற்குள் மறந்து விட்டீர்களே!

கோ. ராஜகுமாரி! மன்னி. என்னை அறியாமல் 'கண்ணே!' என்று அழைத்து விட்டேன்.

கம. மணம் செய்து கொண்டால், பிறகு என்னை எப்படி வேண்டுமென்றாலும் அழையுங்கள். யார் வேண்டாமென்கிறார்கள்?

ஶ்ரீ. [ஒரு புறமாக ஜயகேசரியை நோக்கி] இதென்ன விபரீதம்! விந்தையாக அல்லவோ இருக்கின்றது?

ஜய. அரசே! சற்று நேரத்தில் எல்லா உண்மையும் புலப்படும். அதுவரை தாங்கள் பொறுத்தருள வேண்டும். அதோ அவர்கள் ஏதோ வார்த்தையாடுகின்றனர். கவனிப்போம்.

கோ. பெண்ணே! ஏன் தாமதம்? அம்பிகையைச் சீக்கிரம் தரிசித்து வா. உன்னுடன் நானும் வருவதற்கு ஏன் சம்மதிக்கமாட்டேனென்கின்றாய்?

கம. என்ன? தாங்கள் என்னை அடிக்கடி—

கோ. சரி. பிறகு உனதிஷ்டம். நான் இங்கேயே இருக்கின்றேன். நீ சென்றுவா சீக்கிரம்.

[கமலாவதி போகிறாள்]

ஆஹா! மந்திரவாதியின் திறமையே திறமை! கமலாவதி இதுவரை என்னைக் கண்டமாத்திரத்தில் பாம்பைக் கண்டாற்போல் நடுங்குவளே யன்றி; ஒரு தரமாகிலும் இப்படி இன்பமாக வார்த்தையாடின துண்டோ? இவளுடைய மனதை மாற்றிய அம்மந்திரவாதி உள்ளபடியே சாமர்த்தியசாலியே.

ஜய. [மந்திரவாதியுடையுடன் கொரேசேனன் சமீபத்திற்சென்று]

பிரபு! தாங்கள் விரும்பிய பிரகாரம் அப்பெண்ணின் காதலைப் பெற்றீர்களா? சரி. தாங்கள் இங்கு எதற்காக வந்திருக்கின்றீர்கள்.

கொ. விசேஷம் ஒன்றுமில்லை. கமலாவதி அம்பிகையைத் தரிசிக்க விரும்பினாள். அவளை நான் இங்கு அழைத்து வந்தேன். அதோ! அவள் ஆலயத்துட் சென்றிருக்கின்றாள். நான் அவள் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றேன்.— மந்திரவாதியாரே! 'உம்மால் முடியுமோ, முடியாதோ' வென்று, முதல் முதல் சந்தேகம் கொண்டிருந்தேன். ஆஹா! இப்பொழுது தான் உமது சாமர்த்தியம் அறிந்தேன்.

ஜய. [திடீரென்று உடையை மாற்றி]

அப்படியா! பாபி! என் சாமர்த்தியத்தை நீ இன்னும் அறிவாய்!

கொ. (நடுக்கத்துடன்) ஜயகேசரி! ஜயகேசரி!

ஜய. ஆம். நான் ஜயகேசரிதான்.

கொ. நீ மகாராஜாவைக் குத்தியதற்காக உன்னை—

ஜய. (கோபத்துடன்) கொரேசேனா! மகாராஜாவை யார் குத்தியவன் என்பது எனக்குத் தெரியும். ஜாக்கிரதை! ராஜகுமாரியை வீணாகக் கெடுக்கப்பார்த்தாயே பாபி! மஹாராணியாரைக் கொண்டு இளவரசர் மீது பெரும்பழி சுமத்திய துரோகியும் நீயே.

கொ. ஏய்! யோசித்துப் பேசு—

[அவன் கரத்தில் ஒருவாளைக் கொடுத்து]

பேசாதே துரோகி! நீ இவ்வுலகத்தில் இருக்கத் தகுதியான வனல்லன். நீ அல்லது நான், இருவரில் ஒருவர் இப்பொ ழுது இறந்து தீரவேண்டும். (கோபத்துடன்) உம்—எங்கே, வா பார்ப்போம். ஒரு கை! தருமமே ஜயம்.

கோ. ஜயகேசரி! வேண்டாம், வேண்டாம். என்மீது வீண்சந்தே கம் கொள்ளாதே. எனக்கு உன் மீதுள்ள அன்பு மாறி, உன்னை நான் இவ்வாளுக்கு இரையாக்குவேனென்று கருதி னையோ? அப்படிப்பட்ட பாதகனென்று ஒருக்காலும் நினை யாதே.

[திடீரென்று ஜயகேசரி மீது வாளைவீச, ஜயகேசரி தடுக் கிறான்.]

ஜய. உன்யோக்கியதை வெகு நாளாய்த் தெரியுமே. அப்படியா?

[ஒருபுறமாக ஸ்ரீதரன் விரை வாய்ப்பிரவேசிக்கிறான்.]

சரி. இளவரசரும் விரைவாக வருகின்றார் அதோ! அவர் வந்து விட்டால் என் காரியம் நிறைவேறாமற் போனாலும் போய்விடும். ஆதலின் அவர் சமீபிப்பதற்குள் காரியத்தை நிறை வேற்றிவிட வேண்டும்.

[கொரோசேனன்மீது வாளை வீச, அவன் பூமியிற் சாய் கிறான். ஸ்ரீதரன் சமீபத்தில் பரபரப்புடன் வருகிறான்.]

ஸ்ரீ. ஜயகேசரி! என்ன காரியம் செய்தாய்?

[கொரோசேனனை நோக்கி]

கொரோசேனா! ஹா! உன்விதி இப்படியும் இருந்ததா?

கோ. ஸ்ரீதர! நானோ சாகும் தறுவாயி லிருக்கின்றேன், இனி நான் பிழைத்து ஒரு சுகமும் அடையப் போகிறதில்லை. என் மனச் சாட்சி என்னை வருத்துகிறது. நான் உனக்கு இது

வரையிலும் செய்து வந்த தீங்குகள் அளவிலடங்கா. உன் மீது உன் சிற்றன்னை பெரும்பழி சுமத்தினளென்றெண்ணுதே. அதற்கெல்லாம் நானே காரணம். துராசையால் உன் தந்தையைக்கொல்ல முயன்றவனும் நானே. இன்னும்—நான்—உனக்கு—நான் பாவி — மனப்பூர்வமாய் — மன்னித்தால் தான்—நற்கதி—

[தலையை அங்கு மிங் கும் அசைக்கிறான்.]

ஸ்ரீ. ஹா! ஹா! (ஜயகேசரியை நோக்கி) ஜயகேசரி! என்ன இருந்தாலும், நீ இப்படிச் செய்தது சரியல்ல.

கோ. ஹா! ஹா! ஆ! [இறக்கிறான்]

ஜய. அரசே! ஒருவார்த்தை. கொடூரசேனன் தங்கள் உறவினன். ஆதலின் அவன் இறப்பது தங்களுக்குச் சம்மதமாக இராது. உங்களுக்கு மட்டுமென்ன? யார்க்குமே இது சகஜம். ஆனால் அவனை உயிருடன் வைத்திருந்தாலோ, மேன்மேலும் அவனால் தங்களுக்கும் பிறர்க்கும் தீங்கே உண்டாகும். ஆகையால் தான் அவனைக் கொல்லத் துணிந்தேன். அவன் என்னிடம் காட்டிய நயவஞ்சகத்தை மட்டும் நீங்கள் அறிந்திருப்பீர்களானால்—ஏன் பலவார்த்தை? அவனைக் கொன்றதன் நிமித்தம் என்மீது தங்கட்கு வருத்தம் இருப்பின் இதோ இவ்வாள்கொண்டே மாய்த்துக் கொள்கிறேன் என் உயிரை.

[கத்தியை உருவுகிறான்]

ஸ்ரீ. (ஜயகேசரியைத் தடுத்து அவனைத் தழுவிக் கொண்டு) ஜயகேசரி! என்ன பைத்தியக்காரன் நீ! கொடூரசேனன் யோக்கியதை தெரியாதா? கொல்லாமல் காரியத்தை முடித்திருக்கக் கூடாதா? என்று கேட்டேனே தவிர வேறில்லை. அதற்குள் "உயிரை மாய்த்துக் கொள்ளுகிறேன்" என்று கிளம்பி விட்டாயே. இது சரியா? ஏதோ உனக்கே சகிக்க வில்லை போதும்! அவ்வளவு தான் அவன் விதி.

ஜய. உள்ளபடியே அவன் கொடுமை எனக்கு வரவர சகிக்கத் தானில்லை. உங்கள் நன்மை மட்டுமன்று, உலக் நன்மையையும் உத்தேசித்தே இது செய்யத் துணிந்ததென்மனம். இரக்க மேலீட்டால் எங்கு அவனுக்கு உயிர்ப்பிச்சை கொடுத்து விடப் போகிறீர்களோ என்று அஞ்சித்தான் உங்கள் தலையைக் கண்டவுடன் அதி சீக்கிரத்தில் காரியத்தை முடித்து விட்டேன். என்ன செய்கிறது? அவனைக் கொன்றதில் எனக்கும் விசனந்தான். அவனை நான் கொன்றிராவிடில்

என்னை அவன் கொன்றே யிருப்பன். நான் இறப்பேன் என்று கூட இது எண்ணிச் செய்யவில்லை. நிரபராதிகள் எத்தனைப் பேருக்கு இவ்வாறு தீமை ஏற்படும்! நீங்களே யோசித்துப் பாருங்கள்.

ஸ்ரீ. உண்மையே. தன்னைக்கொல்ல வந்த பசுவையும் கொல்ல சாஸ்திர முண்டு.

ஜய. எப்படியோ காரியம் ஒருவாறாய் நிறைவேறி விட்டது. வெகு நாழிகையாய் விட்டது. நாம் கமலாவதியை அழைத்துக் கொண்டு அரண்மனைக்குச் செல்வோம்.

ஸ்ரீ. பிறகு சாவகாசமாக எல்லாம் பேசிக் கொள்வோம். ஆம். வாருங்கள் போவோம். எல்லோரும் போகிறார்கள்.

(காட்சி முடிகிறது.)

K. வேங்கடராமையர்.

விடுகதை விஞா.

மூன்றெழுத்தில் ஓர்சொல்: முதல்இல்லையேல், 'மாதங்கம்'
என்றஇ ரண் டாவதில்லை யேல், 'சம்பு.'—மூன்றாவ
தில்லையேல், ஆகும் 'இகழ' என. அன்பர்காள்!
சொல்லுமின் யாதோஅச் சொல்.

—சிற்றம்பலநாதன்.

விநோதக் கூற்று.

சேஷு:—குப்பு! உன்கடிகாரம் அவசரமாய் வேண்டும். நாளைத் தந்து விடுவேன்.

குப்பு:—தருகிறேன். ஆனால் ஒன்று: பிரதிதினமும் இரண்டே வேளை தான் அது சரியான மணி காட்டும். வேண்டுமாயின் இந்தா. மகாராஜனுக் கொண்டு போ.

[குறிப்பு:—அது ஓடாத ஓட்டைக் கடியாரம். அது இப்பொழுது 8-45 ல் நிற்கிறதென வைத்துக் கொள்வோம். பிரதிதினமும் பகல் 8-45க்கும்; இரவு 8-45க்கும், அதை எடுத்துப் பார்த்தால் அதே மணி தானே அது காட்டும்?. ஆகவே இரண்டு வேளை சரியான மணியே அது காட்டும் என்பதில் தவறில்லையே.]

அந்தகராகிய மாம்பழக்கவிச்சிங்க நாவலர்க்கு மூக்குத்தூள் போடுவதில் மிகப்பிரியம். ஸ்ரீ பொன்னுசாமித்தேவரது முன்னிலையில் ஒருநாள் பிரசங்கம் செய்து கொண்டிருந்தபோது அவர் பக்கத்திலிருந்த பொடி

டப்பியைத் தேவர் வேடிக்கைக்காக எடுத்து வைத்துக்கொண்டு விட்டனர். பிரசங்கத் திடையில் புலவர், டப்பியிருந்த இடத்தில் தடவிப் பார்க்க, தேவர், "என்ன தேடுகிறீர்?" என்ன, புலவர், "திருச் சமுகத்தில் அறிவிக்கக்கூடிய அவ்வளவு பெரிய காரியமில்லை; இஃதொரு பொடிக் காரியமே" என்றார். தேவர் நகைத்து "ஐந்து பொடிவர உடனே வேலவர் மீது பாடும். நும் பொடிக் காரியமும் அனுகூலமாகும்" என்றார். நாவலர் தக்ஷணமே,

"கரும்பொடிமர் வஞ்சவெறி கைப்பொடிசில் வெற்பர்
தருங்கொம் பொடிசைதெய்வத் தையல்—விரும்புபுய
வான்பொடியா நின்றகதிர் மானுமயி லேயெனையாள்
தேன்பொடியார் பூம்பதந்தந் தே"

எனப் பாட, தேவர் அவரது ஆசுகவிக்கு அதிசயித்துப் பொன்னாலாகிய நவரத்ந கஜிதமான டப்பி யளித்தனர். —கோடைக்காரசு.

சிறுவர்க்காகும் கதைப்பூங்கொத்து.

(150-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

கதை—26.

தீயர்நல் லோரைத் தீங்குறச் செய்வர்.

சுமந்தன் என்ற சூத்திரன் ஒருவன் குரங்கு ஒன்று வளர்த்துவந்தான். ஒருசமயம் அவன் குரங்குடன் கட்டுச்சோறு கொண்டு வேற்றூருக்குப் போக நேர்ந்தது. வழியில் இருந்த குளத்தில் தங்கிச் சோற்றை ஒரு மரத்தடியில் வைத்து விட்டுப் பல் விளக்கச் சென்றான். அச்சமயம் அத் துஷ்ட மர்க்கடம் அவ்வுணவு முற்றும் தின்று சமீபத்திலிருந்த ஒருஏழை ஆட்டின் வாயில் கையைத் துடைத்து விட்டு, ஒன்று மறியாததுபோல விலகி யிருந்தது. சுமந்தன் கரையேறியதும் கட்டுச் சோற்றைக் காணாதவனாய் சோறு அப்பிய வாயுடன் இருந்த ஆட்டைக் கண்டான். உடனே அம் மூடன் அவ்வாடே சோற்றைத்தின்றதென்று எண்ணித்தடியால் அதனை நையப்புடைத்தான். குற்றவாளியான குரங்குதப்பியது. துஷ்டர்கள் ஒரு காரியத்தைச் செய்து, தண்டனையினின்றும் தாம் தப்புமாறு, நிரபராதிகள் அபராதிகளாகும்படியான காரியத்தைச் செய்து விடுகின்றனர்.

கதை—27.

உபாயம் எண்ணுவோர் அபாயமும் எண்ணுக.

ஒருவனத்தில் கொக்குகள் வசிக்கும் ஆலமரம் ஒன்று இருந்தது. அம் மரத்தடியில் ஒரு கருநாகம் உண்டு. அதுமரத்தில் இருந்த கொக்குக் குஞ்சுகளைத் தின்று வளர்ந்தது. ஒருநாள் ஒரு கொக்கு புத்திர சோகத்தினால்

வருந்திக் குளக்கரையை அடைந்து கண்ணீர் விட்டு ஏங்கி ஆலோசித்துக் கொண்டிருந்தது. அதுகண்டு நீரில் இருந்த நண்டு ஒன்று, "மாமா! ஏன் அழுகிறீர்" என்றது. கொக்கு "அப்பா! என்னசெய்வது? துர்ப்பாக்கியர்களான என் குழந்தைகளை ஆலமரத்தடியில் வசிக்கும் ஒருதுஷ்டப் பாம்பு தின்று விடுகிறது. அதைக்கொல்ல உபாயம் ஒன்றுசொல்" என்றது. அது கேட்ட நண்டு தனக்குள் "இவனே எனது ஜன்ம விரோதி. ஆகையால் இவன் குலமே நசிக்கும்படி ஓர்உபாயம் சொல்லுகிறேன்" என்றுஎண்ணி, கொக்கை நோக்கி "மாம! உலர்ந்த மீன்களைக் கீரிப்பிள்ளை யொன்றின் பிலத்திலிருந்து பாம்புப் புற்றுவரை போட்டுக்கொண்டு போம். அம் மீன்களைத் தின்றுகொண்டே சென்று கீரி, புற்றில் இருக்கும் அரவையும் கொன்றே விடும்" என்றது. மூடக் கொக்கும் அவ்வாறே செய்தது. கீரி மீன்களைத் தின்று, பாம்பைக் கொன்றதோடு கொக்குக் குஞ்சுகளையும் தின்று விட்டது.

(இன்னும் வரும்.)

வி. கு. நடராஜன்.

சமாசாரக் கொத்து.

சோழவந்தான் நக்ஷத்திர வித்யாசங்கம்:—ஜுலைமீ 21உ மாலை 4 மணிக்குச் சோழவந்தான் லோகல்பண்ட் சத்திரத்தில், 'உதயதிசை நக்ஷத்திர சங்க'க் கிளையாகவும், வித்யாசங்கமுமாக, 'ஸ்டார் லிட்டாரி ஸோஸைடீ' என்றஓர் சங்கம் அவ்வூர்ச் சிறுவர்களால் ஸ்தாபிக்கப் பெற்றது. அன்று கூடிய கூட்டத்தில் ஹெட் ஸர்வேயர் ஸ்ரீ வி. கணபதிசர்மா அக்ராஸநம் வகித்தனர். மதுரைப் பிரமஞான சங்கத்தைச்சேர்ந்த ஸ்ரீ பி. எஸ். ராமசுப்பையர் "லோககுரு அவதாரம்" என்பதைப்பற்றிய இனிய பிரசங்கம் செய்தனர். பிரசங்கமுடிவில் ஸ்ரீகெ. சககரபாணிராவ் என்னும்மாணவன் இதன் காரியதரிசியாகத் தெரிந்தெடுக்கப்பட்டனன். அநந்தரம்யாவர்க்கும் சந்தன தாம்பூலாதி வழங்கப்பட்டுச் சபை சுமார் 7-மணிக்குக் கலைந்தது.

கண்டு களித்தோன்.

தூற்றுக்குடி ஸ்ரீ ஸத்ஜன சபையின் பத்தாவது ஆண்டு நிறைவுவிழா—இது ஆனிமீ 17, 18, 19உகளில் திருக்களா ஸ்ரீ வீரசேகர ஞானதேசிகர் பாதசேகரர் ஆகிய கோவிலூர் மடாலயம் சிவஸ்ரீ குப்பைய ஸ்வாமிகள் திருமுன் நன்கு நடைபெற்றது.

16உ சுக்கிர வாரத்தன்றே இரவு ரயில்வே ஸ்டேஷனிலிருந்து பக்த கோடிகளும் சாதுக்களும்புடைசூழவும், பூமாரியும் பனிநீர் மாரியும் சொரியவும் ஸ்வாமிகள் அவர்க்கென்று குறித்த விடுதி சென்று அடியார்கட்கு விபூதி, பிரசாதம் முதலியன அளித்து ஆசீர்வதித்தனர்.

17உயன்று தமக்கு ஏற்பட்ட சில அசௌகரியங்களால் வராதிருந்த உபசாரணைத்தலைவரின் பிரதிநிதியாக, வக்கீல் ஸ்ரீசூரியமூர்த்தியா பிள்ளையவர்கள் ஸ்வாமிகளையும் பிரசாரர்களையும் அன்பொடுவரவேற்று வந்தனோபசாரம் கூறினர். பிறகு காரியதரிசி ஸ்ரீ ரா. சங்கரலிங்கம்பிள்ளை அவர்கள் அறிக்கைப்பத்திரம் வாசித்தனர். ஸ்ரீமத் ஸ்வாமிகள், 'சாதுசங்க மகத்வத்தைப் பற்றிய 'பர்தரு ஹரிஸ்லோக' அர்த்தத்தை முகவுரையாகக் கூறி

யதும், அம்மகத்துவமிக்க 'பெரியோர்' என்பதைப்பற்றி மதுரை ஸ்ரீ ம. கோபாலகிருஷ்ணையர் பிரசங்கித்தனர். இஃதானதும், பாளையங்கோட்டை வேதாந்த சித்தாந்த சிரவண மடாலய ஸ்தாபகர் ஸ்ரீ இசக்கியுாடும் பிள்ளையவர்கள் "சற்குரு"வையும், ஸ்ரீமத் ஸ்வாமிகள் "ஆலயவழிபாடு" என்பதையும், பற்றிஉபந்யசித்தனர். அநந்தரம் முடிவுரையாக ஸ்வாமிகள் 'நல்லோரிணக்கமும் நின்பூசைநேசமும் ஞானமும்' என்று வெண்காட்டடிகள் அருளியபடி "பெரியோர்" அனுக்கிரகம் வேண்டியதவசியம். அவ அநுக்ரகத்தால் பகவானை வழிபடுதலாகிய "ஆலயவழிபாடு" அவசியம். இவ்வாலய வழிபாட்டாலேயே ஞானம் அடைய, "சற்குரு" தரிசனம் கிட்டும். ஆகவே, பிரசங்கிக்கப்பெற்ற விஷயங்கள் பொருத்தமும் தொடர்பும் வாய்ந்தவை" என்று கூறி அம்மூன்று விஷயங்களிலும் அடங்கிய நுண்பொருள்களைப் பாமரரும் அறிந்து மகிழ விளக்கினர்.

18௳ ஆதிவாரத்தன்று, ஸ்ரீமத் ஸ்வாமிகள் முகவுரையாக "மானிடப் பிறவியின் உயர்வை"க் கூறி கேவலம் மிருகங்கள்போல் ஐம்புலன் நுகர்ச்சிக்காக அதுகொடுபடாமல் நித்தியாநித்திய வஸ்துக்களை அறியப்போதிய ஞானமும், அத்தகையஞானமொடுதியானமும் வேண்டுமெனக்கூறியதும், ஸ்வாமிகள் குறிப்பிட்ட 'தியானஞான'ங்களைப் பற்றிச் சென்னைலோகோப[illegible]புத்திராதிபர் ஸ்ரீ கோ. வடிவேலு செட்டியார் உபந்யசித்தனர். பிறகு த்தியானத்திற்கு முக்கிய ஹேதுவாகிய "ஈசுவர பூஜை"யைப் பற்றிக் களக்காடுபிர்மஸ்ரீ முத்துசாமி சாஸ்திரிகளும், ஈசுவர பூஜைக்கு முக்கிய சாதனமாக நிஷ்காமியார்த்தமாக ஒழுக்கமுடன் கர்மங்களைக்கிரமமாகச் செய்யவேண்டுமென்பதை வற்புறுத்த "கர்மம்" என்பதைப்பற்றிச் சதாவதான ஸ்ரீ கிருஷ்ணசாமிப் பாவலரும், எத்தகைய ஒழுக்கமற்ற பரம சண்டாளர்களுக்கும் சாதுக்கள் தரிசனத்தாலேயே சகல பாவமும் நீங்கி ஞானம் உதயமாகும் என்பதைவிளக்க "சசிவர்ண போதவிளக்கம்" என்பதைப்பற்றி ஸ்வாமிகளும் பேசி முடித்தனர்.

(இன்னும் வரும்.)

அனுபவானந்தி.

புத்தக மதிப்புரை.

ஞான தீபிகை:—இது தன் பெயருக்கேற்ப அகவிழியின் குருடகற்றி அறிவுவகை அனைத்தும் காண, ஞானமெனும் சுடர் காட்டி, ஈடேறவிரும்பும் எவ்வகையார்க்கும் பேருதவி புரியும் பெற்றி வாய்ந்ததாகும்.

18-ஆவது நூற்றாண்டில் ஆண்ட சீனச் சக்ரவர்த்தியின் விருப்பிற்கிணங்க, அவரது சம்ஸ்தானவித்வானை கீயர்ட்ஸ் என்றமேதாவி, இதனை, இந்திய ஸாத்விக பிராமணர் ஒருவர் எழுதிய ஸம்ஸ்கிருத நூலிலிருந்து சீன பாஷையில் மொழி பெயர்த்தனரென்றும், அதன் அருமை பெருமையை அறிந்து அது சக்கரவர்த்தியின் ஆணையால் சன்மார்க்க போதனைக்குரிய பாட புத்தகமாகச் சீனக் கலாசாலைகளில் கற்பிக்கப்பட்டு வந்தது என்றும், சீனாவிலிருந்த ஆங்கிலப்பாதிரி ஒருவர் அதை மொழி பெயர்த்து இங்கிலாந்திலிருந்த செஸ்டர்பீல்ட் பிரபுவுக்குச் சமர்ப்பிக்க ஐரோப்பாவில் உள்ள யாவரும் அதன் அருமையை அறியலாயினரென்றும், அக்கண்டத்திலுள்ள அநேக கலாசாலைகளில் சன்மார்க்க பாட புத்தகமாக இது விதிக்கப்பட்டுப் பெரும் பயன் விளைத்ததென்றும் தெரிகிறது.

இந்நூலில் ஸர்வமத ஸகோதீரத்வமும், ஸ்திரீ புருஷதர்மும், அரசனுக்கும் தேசத்திற்கும் அனைவருக்கும் செய்யவேண்டிய கடமைகளும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. கலாசாலை மாணவர்க்கு மட்டுமே யன்றி ஆடவர் பெண்டிர் அனைவர்க்கும் பயன் அளிக்கக் கூடியது இது. இதைத் தமிழில் மொழிபெயர்த்து இயற்றியோர் குன்னூர் ஆநந்தாச்ரமத்து ப்ரஹ்மஸ்ரீ ம. வே. சிவசுப்பிரமணிய ஐயரவர்கள். பிரசுரித்தவர் "ஆதர்ஸ் அன்ட் பப்ளிஷர்ஸ் ஏஜன்ஸி, சென்னை ஈ." விலை அணா 12. வேண்டுவோர், சென்னை "பெண்கல்வி" ஆபீசு மானேஜர் ஸ்ரீ அ. சேஷாத்ரி சர்மாவுக்கு எழுதுக.

விளம்பரம்.

குறைந்த சந்தா! ஆர்டருக்கு முந்துங்கள்!!

1916ஆ நவம்பர் மாதம் முதல் வெளிவருவது.

கற்பகம்.

இது தமிழ்ப் பாஷையைப் பரவச் செய்து பொது ஜனங்களின் க்ஷேமத்திற்காக உழைக்கும்

ஓர் இனிய செந்தமிழ் மாத சஞ்சிகை

வருஷ சந்தா தபால் சார்ஜ் உட்பட

உள்நாட்டிற்கு 0—12—0 வெளி நாட்டிற்கு 1—0—0

இதில் வித்தியா விஷயம், கல்வி, சாஸ்திரம், சுகாதாரம், வைத்யம், விவசாயம், வியாபாரம், கைத்தொழில், வேதாந்தம் இராஜாங்க விஷயம், ஜனங்க சீர்திருத்தம், இராஜ பக்தி, நூதன கற்பிதங்கள், மதவிஷயம, சிறுவர் சிறுமிகளுக்கான விஷயங்கள், உலக அற்புதம், வர்த்தமானம், விநோதக் கூற்று முதலான அரும் விஷயங்கள் வித்வத்சிரோ மணிகளால் எழுதப்பட்டு வெளிவருவது.

ஒவ்வொருவரும் தங்கள் தங்களால் இயன்ற வரையில் சந்தாதாரர்களைச் சேர்த்துக்கொடுத்து நம் பத்திரிகையை ஆதரிக்குமாறு வேண்டுகின்றனம்.

N. B. பத்து சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுப்பவர்களுக்கு ஒரு வருஷப் பத்திரிகை இனம்.

மானேஜர்.

"கற்பகம்." புதுவை.

பக்திரசம் நிறைந்தது

பிரகலாதன்.

பாகவதபுராணத்தில்கூறப்படும் பிரகலாதன்கதையை அறியாத தமிழர்இல்லை. அது நாடகரூபமாக நவரஸாலங்காரங்களுடன் இனிய எளிய தெளிய தமிழ் நடையில் எழுதப் பட்டுளது. இடையிடையே இனிய பாடல்கள் அமைந்துள்ளன. கம்பராமாயணம் பாகவதம் முதலிய நூல்களிலிருந்து அநேக மேற்கோள்கள் எடுத்து ஆளப் பட்டிருக்கின்றன. நாவல் படிக்கவிரும்பும் தற்கால ஜனங்களுக்கு நாவல் போலவும், நாடகத்தின் அலங்காரங்களை அறிந்து இன்புற விரும்புவோர்க்கு நாடகமாகவும் இது அமைந்துள்ளது. இதனை இயற்றியவர்'பாரதி' பத்திராதிபர் சதாவதானம் ஸ்ரீமான் தெ கிருஷ்ணஸ்வாமிப்பாவலராவார். வேண்டுவோர் உடனேநமது கம்பெனிக்கு எழுதவேண்டும்.

இதன் விலை அணா 8.

தனபதி.

படிப்பவர் மனத்தைப் பரமானந்தத்தில் ஆழ்த்தும் பலவித கற்பனாலங்காரக்கதை. இதில் தனபதி என்னும் அரசன் தன் வண்ணானை அரசனாக நியமிக்க, அவ்வண்ணான் அப்போதும் தன் புத்தி போகாமல், அரண்மனையை அவலமாக்குவது படிக்கப் படிக்க விடா நகைப்பை விளைவிக்கும்

இதன் விலை அணா 2. வி. பி. சார்ஜ் பிரதியேகம்

தனிப்புத்தகம் வேண்டுவோர் இரண்டரை அணா தபால்லேபில் அனுப்பவேண்டும்.

லீலா ...	0 12 0	கன்னியின் முத்தம் (முதற் பாகம்)	0 12 0
சுந்தரன் ...	0 12 0	(இரண்டாம்பாகம்)	0 12 0
ஆனந்தசுந்தரி ...	0 12 0	இந்திரஜித்தன்	0 12 0
கீசகன் (நாடகம்)	0 12 0	நாடக மஞ்சரி	0 12 0
ஆங்கில சிரோமணிகள்	0 12 0	இராமாயண சாரம்	0 10 0
நீதிபாலன்	0 12 0	புருஷோத்தமன்சரித்திரம்	0 10 0
அயாஷா (முதற்பாகம்)	0 12 0	பன்னிரு நீதிக்கதைகள்	0 10 0
,, (இரண்டாம் பாகம்)	0 12 0	மாலிகா பூஷணி	0 10 0
பத்மலோசனி	0 12 0	ரம்பை	1 0 0 0

பி. வி. கண்ணன் அண் கோ,

சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

ஜ்ஞானபகாரி.

பொது ஜனங்களுக்குள் அறிவைப் பரவச்செய்து, அவர்களின் முன்னேற்றத்திற் கென்றே உழைத்துவரும் ஓர் சிறந்த தமிழ் மாதாந்தப் பத்திரிகை.

இப் பத்திரிகையில் கல்வி யபிவிருத்திக்குரிய பல விஷயங்கள், இந்திய வியவசாயத்தைப்பற்றிய பல விஷயங்கள், கைத்தொழில், வியாபாரம், கூட்டுறவு, ஜனஸமூகத்தின் அபிவிருத்திக்குரிய பல விஷயங்கள், சிறந்த நீதிகளை போதிக்கக்கூடிய நாவல்கள், நாடகங்கள், மாணவர்களுக்கு உபயோகமான வியாசங்கள், நம் தேசத்தின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட மகான்களின் ஜீவிய சரித்திரங்கள் ஸ்திரீகளுக்கும் சிறுவர்களுக்கும் உபயோகமான பல நற்போதங்கள் ஆகிய பல விஷயங்களைக் குறித்துச் சிறந்த கற்றறிந்தவர்களால் வியாசங்கள் எழுதப்பட்டு வருகின்றன. நடை தெளிவானது. சிறுவர் சிறுமியர் முதலிய யாவரும் சுலபமாய்ப் படித்தறியக் கூடியது.

வருஷ சந்தா விகிதம்	இந்தியா, பர்மா, சிலோனுக்கு	ரூ. 3—0—0
	வெளிநாடுகளுக்கு ...	...ரூ. 4—8—0

ஔவை.

நம் அருந்தமிழ் மொழியில் சிறந்த நீதி நூல்களையும் தனிப்பாடல்களையும் அருளிச்செய்து உலகத்தை உய்வித்த ஔவையாரின் திவ்விய சரித்திரம். பல நூல்களைத் தழுவியும் புலவர்களின் கர்ண பாரம்பரையை அநுசரித்தும், வேலூர் வூரீஸ் காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் பு. க. ஸ்ரீநிவாஸாசாரியாரால் எழுதப்பட்டது.

விலை அணா 6.

'ஜ்ஞானபகாரி' சந்தாதார்களுக்கு மாத்திரம் அணா 5.

காரைக்காலம்மை சரிதை.

கற்பிலும் ஈசுவர பக்தியிலும் சிறந்த பெண்மணியும் சிவனடியார் அறுபத்துமூவரில் ஒருவரும், தெய்வக் கவிஞருமாகிய காரைக் காலம்மையென்னும் புனிதவதியாரது இனிய சரித்திரம்.

விலை அணா 1.

மானேஜர்,

ஜ்ஞானபகாரி ஆபீஸ்,

வேலூர்.

ஸ்ரீ கிருஷ்ண விலாஸம் பிரஸ், திருமங்கலம்.

விளம்பரம்.

	ரூ அ பை
அரும்பெருட்டிரட்டு (முதற்பாகம்) தோத்திரப் பாக்கள், வாழ்த்துப் பாக்கள் முதலியன, (8 படங்களுடன்)	0-10-0
ஷை (இரண்டாம்பாகம்) ஆங்கிலச் செய்யுட்கள் மூலமும், தமிழ் மொழி பெயர்ப்புச் செய்யுட்களும்	0-12-0
ஷை (மூன்றாம் பாகம்) உபந்யாஸ வியாஸங்கள்	1-4-0
ஷை (மூன்று பாகமும்)	2-0-0
சாணக்ய சாஹஸம் அல்லது சந்திரகுப்த சரிதம்	1-4-0
தமிழ் வியாஸங்கள். M. V. ரெங்கஸாமி ஐயர் இயற்றியது	0-10-0
மாலினீ மாதவம் (நாவல்)	0-10-0
ஸந்தியாவலி கீதமும், பாரதஜாதீய கீதமும்.	0-4-0
"என் குருநாதன்" அல்லது விவேகாநந்த ஸ்வாமிகளியற்றிய இராமகிருஷ்ண பரமஹம்ஸரின் ஜீவ்யசரித்திரப் பிரசங்கம்	0-3-0
அரசஞ் சண்முகனார் இயற்றிய தொல்காப்பியப் பாயிர விருத்தி	1-0-0
விவேகோதயம் முதல் வால்யூம்	3-0-0
ஷை மாணாக்கருக்கு	2-0-0
பஞ்சலக்ஷண திருமுக விலாசம் (அச்சில்)	1-8-0
ஸ்வாமி விவேகாநந்தர் கடிதங்கள்	0-4-0
தேனும் தேனீயும், நற்பவளமும்	0-10-0
ஸத்திய ஹரிச்சந்திரன்	0-6-0
பெற்றோரும் பிள்ளைகளும்	0-1-0
புத்திமானே பலவான்	0-8-0
மனிதர்க்கு கல்லுணவு மாமிசமா மரக்கறியா?	0-3-0
தமிழ் மொழிவரலாறு —(காலிகோ)	2-0-0
நபாவதி அல்லது காணமல்போன மகள்	1-0-0
கலாவதி (ஓர் புதிய தமிழ் நாடகம்) ..	1-8-0
நாடகவியல் ஓர் நாடகத் தமிழிலக்கணநூல்)	0-8-0
தனிப்பாசுரத் தொகை. (முதற்பகுதி) (ஜி. யூ போப் ஐயரவர்களால் ஆங்கில பாஷையிற் செய்யுளாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது):—காலிகோ பயிண்டு	1-0-0
பாவலர் விருந்து (செய்யுள் நூல் கொத்து)	0-8-0
ஷை கலிகோ	1-0-0
மதிவாணன் (புதுவது புனைந்ததோர் செந்தமிழ்க் கதை துணியட்டை யிட்டது.)	0-12-0
மானவிஜயம் (செய்யுள் நாடகம்.)	0-8-0
ஸ்ரீமணிய சிவனார் சரித்திரம்	0-2-0
மதுரை மாலை (ஸ்ரீபாபதி முதலியாரவர்கள் இயற்றியது)	0-1-6
விவேகபானு 4ம் வால்யூம்	2-0-0
செந்தமிழ் 10 ஆவது வால்யூம்	7-0-0

விவேகோதயம்.

இம்மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகையில், அரிய வியாசங்கள், நாவல்கள் நாடகங்கள், நீதிநூல்கள், பிற பாஷையில் உள்ள அரியவிஷயங்களின் மொழிபெயர்ப்பு, வெளிவராத தமிழ்நூல்கள், விடுகதைகள், விநோதக் கூற்றுகள் முதலியன இனிய எளிய தமிழில் வெளிவரும். கட்டண விவரம்:—வருடசந்தா ரூ 2. (மாணவர்க்கும் பெண்பாலர்க்கும் மட்டும் ரூ $1\frac{1}{2}$) வெளி நாடுகளுக்கு ரூ 2-4-0 விளம்பர விகிதம்:—பக்கத்திற்கு, ஒரு மாதத்திற்கு ரூ $3\frac{1}{2}$. அரைப் பக்கத்திற்கு ரூ 2. நீண்டகாலத்துக்குச் சகாய விகிதம்.

ம. கோபால கிருஷ்ணையர், பத்திராதிபர், மதுரை.

இரண்டு விசனகரமான மரணங்கள்.

மதுரைத் தமிழ்ச் சங்கம், ஸ்ரீ பாண்டித் துரைத் தேவர் ஸ்தாபிப்பதற்குக் காரணராயிருந்தவரும், நாம் நடத்தி வந்த "வித்தியாபாநு"வை நடத்தி வந்தவரும், சற்குண சம்பன்னருமான ஸ்ரீ அரியூர் எஸ். சாமிநாதையரவர்களும்; பழுத்த தேசாபிமானியும், இந்திய மாப்பெருங் கிழவருமான தாதாபாய் நௌரோஜியாரும் தேகவியோகமானமைக்கு மிக விசனிக்கின்றோம்.

மேலைச்சிவபுரி சன்மார்க்க சபையை நடத்திவரும் ஸ்ரீமான் ... செட்டியார், விவேகோதய ... சந்தா செலுத்தியோராவர் ... அனுப்பிய 2 ரூ. சந்தா ... ரூபாய் பத்தும் ... த்துடன் ... பெற்றோம். இவருடைய நன் மாதிரியைப் பின்பற்றி, பிற தமிழ் ... களும் எமக்கு உதவி புரிந்து, புண்ணியப் பேறு பெறுமாறு வேண்டுகிறோம்.

— —

மதுரைத் தமிழ்ச் சங்கத்தைப்பற்றி நாம் அறிவித்தவற்றைக் கவனித்து செய்வன திருந்தச் செய்து வருவதற்காக, அதன் தலைவர் ஸ்ரீ ராமநாதபுரம் ராஜா அவர்களுக்கும்; நம்மிடம் நேரில் விஷயங்களை விசாரித்து அறிந்து ... விஷயங்களுக்காக விசனித்து "இனி அப்பாஷைப் பொது சங்கக் குறைகள் அவசியம் கவனிக்கப்படும்." என்று கௌரவ காரியதரிசியாகிய ஸ்ரீ T. C. ஸ்ரீனிவாச ஐயங்காரவர்கள்கூறிய அமுத மொழிக்காக அவர்க்கும்; நம் முயற்சி வீணாகாமற் செய்த எல்லாம் வல்ல இறைவனுக்கும் பல்லாண்டு கூறுகின்றோம்.

பத்திராதிபர்.

புத்தக மதிப்புரை:— (தொடர்ச்சி.)

கல்வி:— மதுரையில் தென்றியுள்ள இம்மாதாந்தத் ... பத்திரிகை, நாம் நடத்திவந்த வித்யாபநுவில் 'மாலினி ம ... வம்' 'கல்யாணி' ... யென எழுதிவந்த ஸ்ரீ. R. S. நாராயணசாமி ஐயர், B, A; L, T, அவர்களை ஆசிரியராகக் கொண்டு நடைபெறுவதாகும். காகிதப் பஞ்சம் மிகுந்த இக்காலத்தில் ஒரே ரூபாய் சந்தாவில் சித்திரம், கற்கத் தகிய கல்வி ... லைமை, ... தலிய அரிய விஷயங்கள் கொண்டு ஸ்ரீ S. நாகராஜையரால் பதிப்பிக்கப்பெற்று வெளிவரும் இச் சகோதரனுக்கு நல் வரவு கூறி வாழ்த்துகின்றோம்.

—

மிருட்சகந்தாம்:— இது நமது "விவேகோதய"த்தில் வெளிவரும் "கமலாவதி" எழுதிய ஸ்ரீ K. வெங்கடராமையர் அவர்களது சி... நவீன நாடகமாகும். மதுரையில் (எங் மென்ஸ் அசோசியேஷன்), என்ற "வாலிப வித்தியாதுர சங்கத்தார்" ... ளுக்கு முன் நடத்திய போட்டிப் பரீக்ஷைக்கு அனுப்பப்பட்ட நூல்களுள் இதுவும் ஒன்று. அச்சங்கத்தார் ... நடைத்தனைப் ... குள்ளாகி இஃது ... முதற்பட்டது. இவர் தம் கருத்தை அழகாக இச் சிறு நூலில் அமைத்துள்ளார். இதனை 'திராவிட வித்யாசங்க' முதற் பிரசுரமாக வெளியிட்டுள்ளார் வாசகர்க சம்பாதமாக இனியஎளிய நடையில் சுமார் 28 பக்கம் கொண்ட இதின் விலை அணா6. வேண்டுவோர் வடக்கு மாசி வீதி 890 நெம்பர். வீட்டிலிருக்கும் அதன் ஆசிரியருக்கெழுதுக.

பத்திராதிபர்

Wrapper only Printed at The Excelsior Press, Madura-17